செய்திகளை முந்தித் தருகிற தினப் பத்திரிகை

“தந்தி”யின் சென்னைப் பதிப்பு

தினத் தந்தி

DAILY THANTHI

(ஆசிரியர் : சி. பா. ஆதித்தன்)

•

24 - 2 - 48 செவ்வாய்க்கிழமை காலை

சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் கிடைக்கும்.

•

ஏஜன்சி வேண்டுவோர் எழுதுக :

“தினத் தந்தி” ஆபீஸ் 41, கச்சேரி ரோடு
மயிலாப்பூர், சென்னை

வாசகர்களுக்கு :

செய்திகளை அதி சீக்கிரம் கொடுப்பதற்காக, உங்கள் ஊர் வரையில் ‘டெலிபிரிண்டர்’ இயந்திரத்தின் மூலம் அதிவேகமாக செய்திகளை அனுப்பி, அவற்றை அங்கேயே அச்சிடும் தினப் பத்திரிகை

★ மதுரை **தந்தி**

★ கோவை & சேலம் **தினத்-தாள்**

★ திருச்சி **“தினத்தூது”**

- உங்கள் ஊருக்கு எது சமீபமோ அதை வாசியுங்கள்
- அதிலேதான் கடைசிச் செய்திகள் கிடைக்கும்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 29	பிப்ரவரி 15	சர்வசித்து ௵ மாசி 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.



மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 29

என்ன சேதி?

எவ்வளவு காலம் ஆகுமோ ?

ஆஞ்சநேயரின் வாலைப் போல் நீண்டு கொண்டு போகிறது காஷ்மீரப் பிரச்னை ! மலைவாசிகளான கொள்ளைக்காரர்கள் காஷ்மீரத்திலுள்ள கிராமங்களைச் சூறையாடியும், பெண்களைத் தூக்கிச் சென்றும், ஜனங்களைப் பலியிட்டும் வருகிறார்கள். கொடிய அந்தக் கூட்டத்தினருக்குப் பாகிஸ்தான் சர்க்கார் இடவசதி அளித்திருப்பதுடன், நவீன ஆயுத வகைகளையும் கொடுத்து உதவி வருகிறார்கள். மேற்படி கொள்ளைக்காரர்கள் பாகிஸ்தான் எல்லையின் வழியாக வருவதைப் பாகிஸ்தான் சர்க்கார் தடுக்க வேண்டும். அவ்விதம் தடுக்காவிடில், அது உலக சமாதானத்துக்கே உலை வைப்பதாக முடியும். ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவின் முறையீடு இதுதான். இந்த நெருக்கடியைத் தீர்க்கும் விஷயத்தில் காலதாமதம் செய்வது ஆபத்தாகும் என்பதையும் இந்தியா எடுத்துக் காட்டியிருக்கிறது.

யுத்த ஆபத்திலிருந்து உலகம் முழுவதையும் காப்பாற்றுவதற்கென்று ஏற்பட்டுள்ள ஐ. நா. சபை அந்தப் பிரச்னையை நொடிப்பொழுதில் தீர்த்துவிட முடியும். ஆனால், கட்சி அரசியல் சேற்றில் உழன்று வரும் வல்லரசுகளடங்கிய அந்தச் சபையானது மேற்படி ஒரு சிக்கலை ஒன்பது சிக்கலாக்கி, அப்பிரச்னையை அடியோடு குழப்பி விட்டிருக்கிறது. போதாக்குறைக்கு, காஷ்மீரத்தின் மீது படையெடுத்துள்ள கொள்ளைக்காரர்களின் தலைவர்கூட அங்கே சென்று தமது கட்சியின் 'நியாயத்தை' எடுத்துக்கூறி வருகிறார் ! இந்த நிலைமையில் மேற்படி குழப்பம் தீர இன்னும் எவ்வளவு காலம் ஆகுமோ !


கழுதையைக் குதிரை என்று கூறுவதற்கும் காஷ்மீரத்தின் மீது படையெடுத்துள்ள கொள்ளைக்காரர்களைச் சுதந்திர வீரர்கள் என்று கூறுவதற்கும் வித்தியாசம் எதுவுமில்லை. மேற்படி கொள்ளைக் கூட்டத்தினர் அடங்கிய படையை நடத்திய அமெரிக்க அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் ரஸ்ஸெல் ஹெயிட் என்பவர், பாகிஸ்தான் அதிகாரிகள் காஷ்மீரத்தைச் சூறையாடி வரும் கொள்ளைக் கூட்டத்தினருக்குப் பெட்ரோல் முதல் சகல யுத்த தளவாடங்களும் கொடுத்து வருவதாகவும், அந்தக் கூட்டத்ினரைச் "சுதந்திர வீரர்கள்" என்று கூறுவதைக் காட்டிலும் பாகிஸ்தான் சர்க்காரின் பொம்மைகள் என்று கூறுவதே மிகவும் பொருத்தமாக இருக்குமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். பாரபட்சமற்ற அந்த அதிகாரியின் அறிக்கையிலிருந்தாவது, காஷ்மீர யுத்தத்தின் உண்மையான நிலைமையை ஐ. நா. சபையினர் அறிந்துகொள்வார்களா ?

மற்றொரு சந்தர்ப்பம்

சென்ற வருஷம் பிரிட்டிஷார் வெளியேறிய போதே, பிரஞ்சுக்காரர்களும் இந்தியாவிலிருந்து வெளியேறியிருந்தால் எவ்வளவோ கண்ணியமாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டார்கள்.

சமீபத்தில் புதுச்சேரியில் நடந்த பிரஞ்சு இந்தியப் பிரதிநிதிகளின் மகாநாட்டில், பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ள சகலப் பிரதேசங்களும் இந்தியாவுடன் ஐக்கியமாகிவிட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. மேற்படி முடிவை ஏற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து இப்போது வெளியேற பிரஞ்சுக்காரர்களுக்கு மற்றொரு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தையாவது அவர்கள் இழக்காமல் தங்களுடைய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்வார்களாக. மேற்படி நேர்மையான பாதையை விட்டுவிட்டு, தங்கள் ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்களுக்குச் "சுதந்திரம்" அளிப்பதென்ற உருப்படாத யோசனையொன்று பிரஞ்சு சர்க்காரை ஆட்டி வைத்து வருவதாகத் தெரிகிறது. இனி அத்தகைய தந்திரமெல்லாம் பலியாதென்பது சர்வ நிச்சயம் !

நிகழ்ச்சிச் சித்திரம்



(பாதகன் ஒருவனுடைய கொடுஞ்செயலால் இந்தியாவுக்கு ஏற்பட்ட பெரும்பழி கோடிக் கணக்கான இந்திய மக்களின் கண்ணீரால் கழுவப்பட்டுத் தேசம் புனிதமடைந்தது.)



ஹிந்து மகா சபை, ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம், முஸ்லிம் லீக், காக்ஸார் சங்கம் முதலிய வகுப்பு வாத ஸ்தாபனங்களிலிருந்து பலர் ராஜிநாமாச் செய்து வருவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. பின் வாங்கித் திரும்பி வருவதும் சில சமயம் முன்னேற்றந்தானே!

-சாஸ்திரி



சரி, சரி, இந்த ஒரு தடவை மாத்திரம் அவர்களைச் சாப்பிட அனுமதி தருகிறேன்! ஒரு தடவை மட்டுந்தான்! தெரியுமா?
ஹிட்லர்
முஸோலினி



சர்வ தேச சங்கத்தின் ஸ்தானத்துக்கு இப்போது வந்திருக்கும் ஐக்கிய தேச மகாசபை (யு.என்.ஓ.) காஷ்மீர் விஷயத்தில் அதே கொள்கையை அனுஷ்டிக்கிறது!
காஷ்மீர்
பட்டாணி
ஐக்கிய தேச மகாசபை

மறக்க மாட்டோம்

மாநிலத்து மக்களிலே உத்தமரான மகாத்மாவை மறக்கமாட்டோம்.

தமக்கென வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்திருந்த தியாக மூர்த்தியை மறக்க மாட்டோம்.

ஆயிரம் ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்த இந்தியாவுக்கு விடுதலை தந்த வீர புருஷரை மறக்க மாட்டோம்.

பன்னெடுங்காலம் தீண்டாதார் என ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மக்களுக்கு ஹிந்து சமூகத்தில் சம உரிமை அளித்த மகானை மறக்கமாட்டோம்.

பாரத பூமியில் ஆண்களோடு பெண்கள் சரி நிகர் சமானமாக வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்த வீர புருஷரை மறக்கமாட்டோம்.

வரப்போகும் மனித குலத்துக்கெல்லாம் அஹிம்சை வழியின் பெருமையை நிரூபித்துக் காட்டிய அவதார புருஷரை மறக்கமாட்டோம்.

தீங்கு செய்ய வந்தவர்களுக்கும் நன்மையே எண்ணிய கருணை மூர்த்தியை மறக்கமாட்டோம்.

ஏழைகளின் துயரத்தைத் தமது துயரமாக எண்ணிக் கண்ணீர் வடித்த தீனபந்துவை மறக்கமாட்டோம்.

இந்திய மக்கள் ஒற்றுமைப் பட்டு உலகத்தின் முன்னிலையில் தலை நிமிர்ந்து நின்று நல்வாழ்வு நடத்துவதற்காக உயிரையே அர்ப்பணம் செய்த மகா புருஷரை, என்றென்றும் மறக்கமாட்டோம்.

எந்தையை, எம்பெருமானை, குருநாதரை, ஆச்சாரியரை, அருமைத்தலைவரை—ஒரு நாளும் மறக்கமாட்டோம்.

நாம் மறவோம்; இந்தியா மறவாது; நானிலம் மறவாது; மனித குலமும் மறவாது.

• • •

காந்தி மகாத்மாவுக்குத் தக்க ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்துவதற்காக நாடெங்கும் பேச்சுக்கள் நடந்து வருகின்றன; முயற்சிகள் அநேகம் தொடங்கப்படுகின்றன.

மகாத்மா தாம் வாழ்ந்த வாழ்க்கையிலும் அடைந்த மரணத்திலும் என்றும் அழியாத ஞாபகச் சின்னத்தைத் தாமே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆகையால் வேறு ஞாபகச் சின்னங்கள் அமைக்காவிட்டால் அவரை உலகம் மறந்து விடாது.

ஆனாலும் நம் காலத்தில் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்த மகா புருஷருக்கு நமது நன்றியை நாம் செலுத்த வேண்டும்.

தக்க ஞாபகச் சின்னங்களை அமைப்பது நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகும்; மகாத்மாவிடம் நாம் கொண்டிருந்த பக்தியின் சின்னமாகும்.

• • •

மகாத்மாவின் போதனைகளைப் பரப்புவதும் கடைப்பிடிப்பதுமே அவருக்குகந்த ஞாபகச் சின்னங்கள் என்று அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

இந்த நோக்கத்துடன் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் பெரு நிதி திரட்டத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்திய நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் தங்களுடைய பத்து நாள் வருமானத்தை மகாத்மா ஞாபகார்த்த நிதிக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தலைவர்கள் கேட்டிருப்பது அதிகம் இல்லை. மகாத்மாவின் ஞாபகத்துக்கு நாம் இவ்வளவு காணிக்கைதானா செலுத்தலாம்? இதற்குப் பன்மடங்கு செலுத்தினாலும் போதாது.

• • •

காரியக் கமிட்டியார் ஆரம்பித்திருக்கும் நிதிக்குக் காணிக்கை செலுத்துவதோடு நாம் திருப்தி அடைய முடியுமா? முடியாது.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் இந்தியாவின் தந்தைக்கு ஞாபகச் சின்னம் நிறுவ வேண்டும் என்னும் ஆர்வம் மக்களுக்கு உண்டாவது இயல்பு.

மகாத்மா காந்தியின் பெயரால் மண்டபங்கள் எழுப்பவும், வாசகசாலைகள் அமைக்கவும், கல்வி ஸ்தாபனங்கள் நாட்டவும் பல இடங்களில் மக்கள் முன் வருவார்கள்.

முக்கியமான பெரிய சாலைகளுக்கு மகாத்மாவின் பெயரை இடுவார்கள். நகரங்களின் பெயர்களை மாற்றிக் காந்தி நகரங்களாக்குவார்கள்.

காந்தியடிகளுக்குக் கற்சிலைகளும் வெண்கலச் சிலைகளும் பற்பல இடங்களில் ஏற்பட்டே தீரும்.

இவ்விதமெல்லாம் மக்கள் மகாத்மாவிடம் தங்கள் பக்தியைக் காட்டுவது இயல்பேயாகும். ஆனால் இவையெல்லாம் போதுமா? பக்தர்களின் மனதுக்குத் திருப்தி தருமா?

சாதாரண பிரமுகர்களுக்கும் சிறிது பொதுநல சேவை செய்தவர்களுக்குங் கூடச் சிலைகள் நாட்டுகிறோம். அவர்களின் பெயர்களைச் சாலைகளுக்கும் ஊர்களுக்கும் இடுகிறோம். அவர்கள் பெயரால் மண்டபங்கள் கட்டுகிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றக்கூடிய மகாபுருஷருக்கும் இத்தகைய ஞாபகச் சின்னங்களை அமைத்துவிட்டு இந்திய மக்கள் திருப்தியடைந்து விடலாமா?

* * *

காந்தி மகாத்மாவின் போதனைகளைப் பரப்புவதே அவருக்கு உகந்த ஞாபகார்த்தம் என்று சொன்னோம்; ஆனால் அவ்விதம் அவருடைய போதனைகளைப் பரப்புவதற்கு வழி என்ன?

மகாத்மாவின் பிரசங்கங்களையும், அவர் எழுதிய நூல்களையும் லட்சம் கோடி என்ற கணக்கில் அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுக்கலாம்

காந்திஜியின் அமுத மொழிகளை, உபதேசங்களை, வாழ்க்கைத் தத்துவங்கள் அடங்கிய போதனைகளை, மேற்கண்டவாறு அச்சிட்டுக் கொடுப்பது மிகவும் அவசியம்.

பைபிள் என்னும் கிறிஸ்துவ வேதத்தை எவ்வளவு கோடிக் கணக்காக அச்சிட்டு இரண்டணா, ஓரணா விலை வைத்துப் பரப்புகிறார்கள் என்பதைப் பார்த்திருக்கிறோமல்லவா?

அம்மாதிரியே காந்தி வேதத்தையும் அச்சிட்டுப் பரப்புவது அவசியம்.

* * *

மகாத்மா காந்தி தமது இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகப் பல வேலைத் திட்டங்களைத் தமது காலத்திலேயே ஆரம்பித்து வைத்திருக்கிறார். கதர், தீண்டாமையொழித்தல், சாதி வேற்றுமையொழித்தல், மது விலக்கு, கிராமத் தொண்டு, ஆதாரக் கல்வி ஆகிய இவையெல்லாம் அவருடைய மனதுக்கு உகந்த திட்டங்கள். இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவது மகாத்மாவின் ஆத்மாவுக்கு நாம் செலுத்தும் காணிக்கையாகும்.

எல்லாத் திட்டங்களையும் விட முக்கியமானது ஹிந்து — முஸ்லிம் சமூக ஒற்றுமை. இதற்காக மகாத்மா உயிரையே கொடுத்தார். எனவே ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையை நாட்டப் பாடுபடுவதுபோல் மகாத்மாவுக்கு ஆத்ம சாந்தி அளிக்கக்கூடிய வேலைத் திட்டம் வேறு கிடையாது.

மேற்படி வேலைத் திட்டங்களை இந்தியாவின் சுதந்திர சர்க்காரும் மக்களும் ஒத்துழைத்து நடத்தி வைக்க வேண்டும்; அந்தந்த வேலைகளைச் செய்து வரும் ஸ்தாபனங்களைப் பலப்படுத்தவேண்டும். அவற்றுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

* * *

மகாத்மா பிறந்த வருஷத்திலிருந்து 'காந்தி சகாப்தம்' என்று ஒரு புதிய சகாப்தம் தொடங்கி, அதை முதல் வருஷமாக வைத்து வருஷங்களைக் கணக்கிட வேண்டும் என்று அநேக நேயர்கள் யோசனை சொல்லியிருக்கின்றார்கள்.

ரொம்ப சரி: இந்த யோசனை இப்போது உடனே நிறைவேறாவிட்டாலும் கூடிய சீக்கிரத்தில் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை.

காந்தி மகாத்மா பிறந்த நாளிலிருந்து உலகத்துக்கு ஒரு புதிய சகாப்தம் நிச்சயமாக ஆரம்பமாகித்தான் இருக்கிறது. எனவே, புதிய வருஷக் கணக்கும் ஆரம்பமாகித்தானே தீர வேண்டும்?

* * *

மகாத்மா காந்தி இந்தக் காலத்துச் சந்ததிகளுக்கு மட்டும் உரியவர் அல்லர். அவருடைய போதனைகளும் அப்படிப் பட்டவையல்ல.

மகாத்மா ஒரு புதிய தர்மத்தை உலகத்துக்குப் போதித்தார். அதைத் தமது சொந்த வாழ்க்கையில் நடத்திக் காட்டினார்.

கத்தி எடுக்காமல், பலாத்காரத்தைக் கைக்கொள்ளாமல், அஹிம்சை முறையில் போராடி ஓர் அடிமை நாடு உலகமெல்லாம் வியாபித்திருக்கும் சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து விடுதலை அடையலாம் என்று நிரூபித்தார்.

மகாத்மா காட்டிய புதிய வழி வருங்கால உலகத்துக்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் பயன்படக் கூடிய வழியாகும்.

எனவே, அவருக்கு ஏற்படுத்தும் ஞாபகச் சின்னங்கள் பல ஆயிரம் ஆண்டுகள் அழியாமல் நிலைத்திருக்கக் கூடியவையாயும், அவருடைய போதனைகளைப் பரப்புவதற்கு உதவியாயும் இருக்கவேண்டும்.

இந்தியா தேசம் முழுவதிலும் இந்தியாவுக்கு அப்பாலும் கூட ஒரே மாதிரியாக அந்த ஞாபகச் சின்னங்கள் அமைய வேண்டும்.

அத்தகைய ஞாபகச் சின்னத்துக்கு இந்தியாவின் சரித்திரத்தில் சிறந்ததோர் உதாரணம் இருக்கிறது.

இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியா தேசத்தை இமயம் முதல் குமரி வரை ஆட்சி புரிந்த அசோக சக்கரவர்த்தி நாடெங்கும் ஸ்தம்பங்களை நிலை நாட்டியது பிரசித்தியான விஷயம். அந்த ஸ்தம்பங்களில் அழியா எழுத்துக்களில் அசோக சக்கரவர்த்தி நாம் அறிந்த தர்ம மார்க்கத்தின் போதனைகளைச் செதுக்கி வைத்தார்.

அந்த அசோக ஸ்தம்பங்கள் இன்று வரை இருந்து வருகின்றன. அசோகரின் தர்ம சாம்ராஜ்யத்துக்கு அவை அழியா ஞாபகச் சின்னங்களாயிருந்து வருகின்றன. சரித்திர ஆராய்ச்சிக்கு வெகுவாக உதவுகின்றன.

அசோகருக்குப் பிறகு காந்தி மகானுடைய தார்மிக ஆட்சிதான் இந்தியா தேசம் முழுவதும் வியாபித்திருந்தது என்று சொல்லலாம்.

இடையில் வேறு யாரும் இல்லை.

ஆகையால், இமயம் முதல் குமரி வரையில் காந்தி ஸ்தம்பங்களை நிலை நாட்டுவது மகாத்மாவின் பெருமைக்கு மிகப் பொருத்தமான ஞாபகார்த்தமாயிருக்குமென்று கருதுகிறோம்.

அந்த ஸ்தம்பத்தின் அடிப்பகுதியில் ஒரு பக்கம் மகாத்மாவின் திருமுக வடிவமும் ஒரு பக்கத்தில் அவருடைய சுருக்கமான ஜீவிய வரலாறும் மற்ற இரு பகுதிகளில் அவருடைய உபதேசங்களையும் பொறிக்கலாம்.

இந்த யோசனையை மகாத்மாவின் புதல்வர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி மனப்பூர்வமாக ஆதரித்திருக்கிறார். அவரை ஆசிரியராகக் கொண்டு புது டில்லியில் வெளியாகும் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை 8—2—18 இதழில் பரிபூரணமாக ஆதரித்துத் தலையங்கம் எழுதியிருக்கிறது.

இந்தியாவின் மாபெரும் தலைவர்களும் மகாத்மாவின் ஞாபகார்த்தத் திட்டங்களைப் பற்றி முடிவாக யோசனை செய்யும்போது 'காந்தி ஸ்தம்பங்கள்' நாட்டும் யோசனையையும் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

எந்த ஞாபகச் சின்னம் எப்படி அமைந்தாலும் அமையாவிட்டாலும் ஒன்று நிச்சயம். காந்தி மகாத்மாவை நாமும் நமது சந்ததிகளும் மறக்கமாட்டோம்; சத்தியமாக மறக்கமாட்டோம்.

சத்தியமூர்த்தி சாகரம்



அணைக்கட்டின் கீழ்ப்புறம்: வெள்ளத்தின் வேகத்தைத் தடுக்கும் சிறிய மேடைகளில் உட்கார்ந்தும் ஆனந்திக்கலாம்.

சில மாதங்களுக்கு முன்பு நமது மராமத்து இலாகா மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்கள் நுங்கம்பாக்கத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அப்போது சென்னை நகர சபைக்கு அவர் ஒரு எச்சரிக்கை செய்தார். "பூண்டித் தேக்கத்துக்குச் 'சத்தியமூர்த்தி சாகரம்' என்ற பெயர்தான் பொருத்தமானது. சென்னை நகரசபை அம்மாதிரி தீர்மானம் செய்து நல்ல பெயர் வாங்கிக் கொண்டால் ரொம்ப நல்லது. இல்லாவிட்டால் சென்னை சர்க்காரே முன்வந்து மேற்படி நாமகரணத்தைச் செய்து விடுவார்கள்!" என்று சொன்னார்.

இதற்குப் பிறகு சென்னை நகர சபை சும்மா இருக்க முடியுமா? ஏற்கெனவே பூண்டித் தேக்கத்துக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பெயரை வைக்கவேண்டுமென்ற பிரேரணை வந்த சமயம், சென்னை நகர சபை பெரும்பான்மை வோட்டுக்களால் அதை மறுதளித்தது. இப்போது அந்த மறுதளிப்பை வாபஸ் வாங்கிக் கொண்டு, "பூண்டித் தேக்கத்துக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி பெயரைத்தான் இட வேண்டும்" என்று சிபார்சு செய்தது.

எனக்கும் உடனே 'சத்திய மூர்த்தி சாகர'த்தைத் தரிசனம் செய்ய வேண்டும் என்னும் தாகம் ஏற்பட்டது.


புராணங்களில் சொல்லப்படும் 'க்ஷீர சாகர'த்தையும், உலக வழக்கில் உள்ள சம்சார சாகரத்தையும் தவிர, மற்றப்படி 'சாகரம்' என்றால் உப்பு நீராகவே இருக்கும்.

ஆனால் பூண்டியில் உள்ள 'சத்திய மூர்த்தி சாகர'மோ இன்றைக்குச் சென்னைமா நகரில் வசிக்கும் மக்களில் பாதிப் பேருக்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுக்கிறது! வாழ்நாளெல்லாம் சுதந்திர தாகங்கொண்டிருந்து, மற்றவர்களுக்கும் சுதந்திர தாகத்தை அபாரமாய் உண்டாக்கிய தலைவரின் பெயரை இனிச் சென்னை வாசிகள் தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கும்போதெல்லாம் ஞாபகப் படுத்திக் கொள்வார்கள்.

* * *

சென்னைமா நகரில் 1937-ம் வருஷத்தில் நேர்ந்திருந்த தண்ணீர்ப் பஞ்சம் சிலருக்கு நினைவில் இருக்கலாம். அந்த வருஷம் பருவ மழை பெய்யாதபடியால் 'ரெட் ஹில்ஸ்' ஏரியில் தண்ணீர் வற்றிப் போகவே, சென்னை நகரின் குழாய்களில் தண்ணீர் சொட்டுச் சொட்டென்று சொட்ட ஆரம்பித்தது. நகரவாசிகள் தண்ணீருக்குத் தவித்தார்கள்.

அப்போது 'குசஸ்தலையாறு' என்னும் நதியில் பூண்டி கிராமத்துக்கு அருகில் ஒரு அணை கட்டினால் தண்ணீரை நிறையத் தேக்கி வைக்கலாமென்றும், அதை அவசியமான அளவுக்கு 'ரெட் ஹில்ஸ்' ஏரியில் விட்டு வந்தால், சென்னை நகருக்குத் தண்ணீர்ப்



அணைக்கட்டின் முகப்பிலுள்ள ஸ்தம்பம். — இந்த ஸ்தம்பத்திலேதான் "சத்தியமூர்த்தி சாகரம்" என்று எழுதப்பட வேண்டும்.

பஞ்சமே இராது என்றும் என்ஜினியர்கள் சொன்னார்கள்.

இந்தத் திட்டமானது ஸ்ரீ சத்தியமூர்த்தி சென்னை நகர சபையின் தலைவரா யிருந்தபோது ஊர்ஜிதமாயிற்று. 1940-ம் வருஷ மத்தியில் வேலை தொடங்கி மூன்று வருஷத்தில் அணைக்கட்டு முடிந்தது. செலவு 65 லட்சம் ரூபாய் ஆயிற்று இப்போது கட்டினால் அதே அணைக்கட்டுக்குச் செலவு இரண்டு கோடி ஆகுமாம்! எனவே, தாம் மேயரா யிருந்த காலத்தில் அணைக்கட்டு வேலை ஆரம்பித்துவிட வேண்டுமென்று அவசரப்பட்ட ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திருநாமம் வாழ்க!

* * *

பூண்டித் தேக்கம் வேலை முடிந்து வருஷம் நாலுக்கு மேலே ஆனபோதிலும், 'சத்தியமூர்த்தி சாகரம்' என்ற பெயர் நிச்சயமான பிறகுதான் அதைப் பார்க்க வேணுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. இரண்டு வாரத்துக்கு முன்னால் நண்பர்களின் கோஷ்டியுடன் சென்றிருந்தேன். அணைக்கட்டையும் அணைக்கட்டுக்கு அப்பால் தேக்கப்பட்டிருந்த ஜலத்திரளையும் பார்த்தேன். கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் அந்தக் காட்சியைப் பார்த்ததுமே தாகம் தீர்ந்து விட்டது. சுமார் 7000 ஏக்கரா விஸ்தீரணத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. நடு நடுவில் தண்ணீர் நிலையின் ஆழம் சுமார் 33 அடி என்று தெரிந்தது. இந்தத் தேக்கத்தின் காரணமாக இருபத்தேழு கிராமங்கள் நீரில் மூழ்கிப் போயினவாம். மூழ்கிப் போன கிராமங்களில் வசித்திருந்தவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கப் பட்டதால் அவர்கள் சந்தோஷமாக வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்று குடியேறி விட்டார்களாம்.

தண்ணீரில் மூழ்கிய கிராமங்களில் ஒன்றில் ஒரு பெரிய ஆலயம் இருந்தது; இப்போதும் இருக்கிறது. அதாவது கோயிலின் மேல் மண்டபம், கர்ப்பக் கிரஹ மண்டபம், ஸ்தூபி ஆகியவை தண்ணீருக்கு மேலே தெரிகின்றன. அந்தக் கோயிலில் வீற்றிருந்த இறைவன் தண்ணீரில் மூழ்கியது பற்றிக் கொஞ்சமும் கோபித்துக் கொள்ளவில்லையென்று அறிந்தேன். எல்லையில்லாத ஆழந் தெரியாத அலைமோதும் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டு நிம்மதியாகத் தூங்கும் பகவான் இந்த முப்பத்துமூன்று அடி ஆழமுள்ள நீர் நிலைக்கா பயப்பட்டு விடப் போகிறார்? ஒருகாலும் இல்லை. இங்கும் நிம்மதியாகத்தான் பகவான் இருப்பார். ஆனால் கிட்டப் போய்ப் பார்த்து விட்டு வருவதற்கு எனக்குத் தான் வசதி இல்லை.

* * *


சென்னையிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் பூண்டிக் கிராமம் இருக்கிறது. பூண்டிக்குப் புறப்பட்டபோது அங்குள்ள அணைக்கட்டையும் சாகரத்தையும் பார்த்து விட்டு வரும் உத்தேசத்துடன் மட்டுந்தான் போனோம். அந்த உத்தேசம் சுலபத்தில் நிறைவேறி விட்டது. அணைக்கட்டையும் சாகரத்தையும் பார்த்தோம். தண்ணீரைக் கொஞ்சமாக விடுவதற்கும், அதிகமாக விடுவதற்கும், விடாமலே அடைத்து

வைப்பதற்கும் செய்யப்பட்டிருக்கும் அதிசயமான ஏற்பாடுகளையும் பார்த்தோம். நதியில் பிரவாகம் வரும் சமயங்களில் தண்ணீரை அதிகமாகத் திறந்து விட்டால் அதன் வேகத்தைத் தடுத்து மெதுப்படுத்தி விடுவதற்காகச் செய்திருக்கும் ஏற்பாட்டையும் கவனித்தோம். ஒரு கை தண்ணீரும் அள்ளிக் குடித்து "சத்திய மூர்த்திக்கு ஜே!" என்று கோஷித்த பிறகு சென்னைக்குத் திரும்ப ஆயத்தமானோம்.

அப்போது ஸூபர்வைஸர் ஸ்ரீ ராமமூர்த்தி, "இதற்குள் புறப்படுகிறீர்களே? ராமபாத சாகரம், துங்கபத்திரை, பவானி, மலாம்புழை அணைக்கட்டுகளைப் பார்க்க வேண்டாமா?" என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "நான்தான் ஜெம்பாக்கத்திலிருந்து வருகிறேன்: தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டேன். பிறகு ஸ்ரீ ராமமூர்த்தி விஷயத்தைச் சொன்னார். பூண்டியில் அணைக்கட்டைத் தவிர 'நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையம்' ஒன்று இருப்பதாகத் தெரிந்தது. இது 1944-ம் ஆண்டில்தான் ஸ்தாபிக்கப்பட்டதாயினும், இந்தச் சில வருஷத்தில் அபாரமான ஆராய்ச்சிகள் நடத்தியிருப்பதாகத் தெரிய வந்தது. முக்கியமான பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு அவசியமான பூர்வாங்க சோதனைகளையெல்லாம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் செய்கிறார்களாம்.

உதாரணமாக, ராமபாத சாகரம் அணைக்கட்டு இருக்கிறது. (அணைக்கட்டு இப்போது இல்லை; ஆனால் அதைப் பற்றிய யோசனை இருக்கிறதல்லவா?) அதைக் கட்டி முடிக்க 80 கோடி ரூபாய் ஆகும் என்ற விவரத்தை நேயர்கள் படித்திருப்பார்கள். செலவுத் திட்டத்திலிருந்து அது எவ்வளவு மகத்தான வேலையென்று தெரிந்து கொள்ளலாம். கோதாவரி ஆறு இந்தியாவிலுள்ள மூன்றாவது பெரிய ஜீவ நதி. அதில் எப்போதும் பிரவாகம் இருந்து கொண்டிருக்கும். அணைக்கட்டுக் கட்ட வேண்டுமானால், நதியின் மணல் பரப்புக்குக் கீழே இருநூறு அடி ஆழம் தோண்டி அஸ்திவாரம் போட்டாக வேண்டும். நதியை இரண்டாகப் பிளவுபடுத்தி, ஒரு பகுதியில் தண்ணீரை விட்டு இன்னொரு பகுதியை அடைத்து விட்டு மேற்கண்ட விதம் அஸ்திவாரம் போட வேண்டும். பெரிய பெரிய பிரம்மாண்டமான இரும்புக் குழாய்களை மணலில் கீழே இறக்கி நதியை அடைக்க வேண்டும். இப்படி அடைத்த பிறகு கசிந்து வரும் தண்ணீரை இறைப்பதே பிரமப் பிரயத்தனமாயிருக்கும். அடியில் தோண்டத் தோண்டத் தண்ணீர் குபு குபு வென்று ஊறி வெள்ளமாய்ப் பெருகும். இந்த நிலையில் அணைக்கட்டுக் கட்ட வேண்டும். இதைப்பற்றி யோசனை கேட்பதற்காக நமது மாகாணத்து என்ஜினீரிங் நிபுணர்கள் அமெரிக்கா சென்றார்கள். "நீங்கள் போட்ட திட்டமே சரி; அதைவிட நல்ல திட்டம் இருக்க முடியாது!" என்று அமெரிக்க நிபுணர்கள் சொல்லி விட்டார்கள்.


இப்படி அமெரிக்காவில் 'சர்டிபிகேட்' வாங்கிய திட்டம் பூண்டியிலேதான் உருவாயிற்று. பற்பல சோதனைகளுக்குப் பிறகு உருவாயிற்று. கோதாவரி நதியின் அகலம் மூன்று மைல் என்றால், இங்கே அதை மூன்று கஜமாக வைத்துக்கொள்



அணைக்கட்டின் ஒரு மூலையிலுள்ள கோபுரம்



பாரிஸ்டர் எம். கே. காந்தி



ஏழை இந்தியாவின் ஏகப் பிரதிநிதி



சேவக்கிராம ஆசிரம வாசி



கிறார்கள். அதேமாதிரி கணக்கில் தண்ணீர் வெள்ளத்தை விடுகிறார்கள். அகலம் நூற்றுக்கு ஒரு பங்கு என்றால், தண்ணீர் வெள்ளமும் அப்படியே நூற்றுக்கு ஒரு பங்காகவும், வெள்ளத்தின் வேகமும் நூற்றுக்கு ஒரு பங்காகவும் வைத்துக் கொண்டு சோதனை நடத்துகிறார்கள். அதில் ஏற்படக்கூடிய இடையூறுகளை யெல்லாம் கண்டு பிடிக்கிறார்கள். அஸ்திவாரம் எவ்வளவு ஆழத்திலிருந்து போட வேண்டும், அணைக்கட்டின் உயரம் எவ்வளவு இருக்கவேண்டும், அதற்கு எவ்வளவு இரும்பு வேண்டும், எவ்வளவு செமண்டு வேண்டும், என்னென்ன இயந்திரங்கள் வேண்டும் என்றெல்லாம் சோதனை செய்து கண்டு பிடிக்கிறார்கள்.

"இதென்ன? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? இப்படிச் சின்ன அளவில் திட்டம் போட்டுச் செய்யும் சோதனைகள் பெரிய அணைக்கட்டு கட்டுவதற்கு உதவுமா?" என்றால், கட்டாயம் உதவும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, மேற்படி ஆராய்ச்சி நிலையத்தில் துங்கபத்திரா அணைக்கட்டு கட்டுவதற்கு இரண்டு திட்டங்கள் காட்டப் படுகின்றன. அணைக் கட்டு. மதகு. மதகை அடைக்கும் கதவு, கதவைத் திறந்துவிட்டதும் தண்ணீர் பாய்வது எல்லாம் காட்டப்படுகின்றன.

இரண்டு திட்டங்களில் ஒன்று இந்தப் பூண்டி ஆராய்ச்சி நிலையத்தில் தயாரானது. இன்னொன்று ஹைதராபாத் என்ஜினியர்கள் தயாரித்தது. பூண்டியில் போட்ட திட்டத்தில் பல லட்சம் ரூபாய் லாபமாகிறது. வடநாட்டிலிருந்து சில பிரபல என்ஜினியர்கள் வந்து இரண்டு திட்டங்களையும் பார்வையிட்டார்கள். "பூண்டி நிலையத் திட்டந்தான் சரி!" என்று சொல்லிவிட்டார்கள். நைஜாம் சர்க்காரும் அதை ஒப்புக்கொண்டு, வேலையும் நடந்து வருகிறது.

இப்படி இன்னும் பல சோதனைகளைப் பார்த்தோம். மேட்டூர் தேக்கத்தின் தண்ணீர் இப்போது தஞ்சை ஜில்லாவுக்கு மட்டும் பயன்பட்டு வருகிறது. சேலம் ஜில்லாவுக்குப் பயன்படவில்லை. அதைச் சேலம் ஜில்லாவுக்குப் பயன்படுத்த ஒரு திட்டம் போட்டுச் சோதனை செய்து வருகிறார்கள்.

தஞ்சாவூரை நோக்கித் தடதட வென்று கால்வாயில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தக் கால்வாய் ரொம்பப் பள்ளம். சட்டென்று ஒரு பலகையை அந்தக் கால்வாயில் செருகுகிறார்கள். அவ்வளவுதான்! பக்கத்திலுள்ள மேட்டுக் கால்வாயில் குபு குபு வென்று தண்ணீர் பாய்ந்து வெள்ளமாய் ஓடுகிறது. இப்படி இரண்டு மூன்று தடவை செய்து காட்டவே எனக்கு ஒரே கவலையாகப் போய்விட்டது. தஞ்சாவூர் ஜில்லாவுக்குப் போக வேண்டிய தண்ணீரெல்லாம் அநியாயமாய்ச் சேலத்துக்குப் போகிறதே என்று. "போதும்! நிறுத்துங்கள்!" என்று சொன்னேன். ஜனாப் டி. பி. குட்டியம்மு சாகிபுவும் நிறுத்தும்படி உத்தரவு போட்டார். அதன் பயனாக, சேலம், தஞ்சாவூர் இரண்டு இடத்துக்குமே தண்ணீர் போகாமல் நின்றுவிட்டது!

"ஆகா! இந்த என்ஜினியர்களே இப்படித்தான்!" என்று வருத்தப் பட்டுக் கொண்டேன்.

ஜனாப் டி. பி. குட்டியம்மு சாகிபு மேற்படி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரான எக்ஸிகியூடிவ் என்ஜினியர். ('இச்கிபெட்டின என்ஜினியர்' அல்ல,— எக்ஸிகியூடிவ் என்ஜினியர்!) மிக்க சிரத்தையுடன் அங்கு நடக்கும் சோதனைகளையெல்லாம் எங்களுக்குக் காட்டி விவரித்துக் கொண்டு வந்தார். இந்த ஆராய்ச்சிகளில் அவருக்கு எவ்வளவு ஆர்வம் என்பது நன்றாகத் தெரிந்தது.

* * *

பொதுவாக, சென்னை மாகாணம் பிரபல என்ஜினியர்களுக்குப் பெயர் போனது. நமது மாகாணத்தில் உள்ள என்ஜினியரிங் திறமையை யெல்லாம் நன்றாகப் பயன்படுத்தினால் ஒரு சில வருஷங்களில் சென்னை மாகாணத்தை நீர் வளத்தில் நிகரற்ற நாடாகச் செய்து விடலாம். இத்தனை காலமும் நமது என்ஜினியர்கள் அதிகாரவர்க்க ஆட்சியின் கீழ் அதிகாரவர்க்க தோரணையில் காரியம் செய்துகொண்டு வந்தார்கள். இப்போது சுயராஜ்ய சர்க்காரின் கீழ் வேலைசெய்து வருகிறார்கள். அதிலும் சென்னை மாகாணத்தின் என்ஜினியரிங் இலாகா கனம் பக்தவத்ஸலத்தின் பொறுப்பில் இருக்கிறது. திறமையை நன்கு உபயோகப்படுத்தவும் ஊக்கம் தர வேண்டியவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் கனம் பக்தவத்ஸலம் நன்கு அறிந்தவர். அவருடைய நிர்வாகத்தின் கீழ் என்ஜினியரிங் இலாகாவின் மனப்போக்கே நல்ல மாறுதல் அடைந்து வருவதை எங்கும் கண்டு வருகிறோம். பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருப்பதையும் பார்க்கிறோம். சென்னை மாகாணத்தின் அதிர்ஷ்டம் மட்டும் சரியாக இருந்தால் நமது என்ஜினீரிங் இலாகாவின் மூலம் நாடு பலவிதங்களிலும் நன்மை அடைவதைச் சீக்கிரத்தில் பார்க்கலாம்.



மாந்தருக்குள் ஒரு தெய்வம்



கல்கி

2. கல்வியும் கல்யாணமும்

தம்பி! பள்ளிக்கூடத்துப் பரீட்சைகளில் சில சமயம் அதிக 'மார்க்' வாங்கவில்லையே என்று நீ வருத்தப்படுகிறாயல்லவா? ஆனால், அப்படி வருத்தப்படுவது அவசியமல்லை. பள்ளிக்கூடங்களில் எப்போதும் அதிக மார்க் வாங்கிப் பரீட்சையில் தேறுகிறவர்கள் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் சாதிப்பது கிடையாது. மார்க் வாங்காதவர்களும், 'மந்தம்' என்று பெயர் வாங்கியவர்களும் பிற்காலத்தில் அரும் பெரும் காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். இதற்கு உதாரண புருஷராக மகாத்மாவே விளங்குகிறார்.

போர்பந்தரில் காந்திஜி ஏழு பிராயம் வரையில் இருந்தார். அந்த ஊரிலிருந்த ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்கும் போனார். ஆனால் அதிகமாக ஒன்றும் படித்துவிடவில்லை. "அந்தக் காலத்தில் என் அறிவு மிக்க மந்தமாயிருந்தது" என்று காந்திஜி தம் சுய சரிதத்தில் எழுதியிருக்கிறார்.

காந்திஜிக்கு ஏழு பிராயம் ஆனபோது, அவருடைய தந்தை ஸ்ரீ காபா காந்தி 'இராஜஸ்தான் கோர்ட்'டின் நீதிபதியாகி இராஜகோட்டைக்குக் குடிப் போனார். இராஜகோட்டையிலிருந்த பெரிய பள்ளிக்கூடத்திலும் மோகன்தாஸ் காந்தி 'கெட்டிக்காரர்' என்று பெயர் வாங்கவில்லை. படிப்பில் அவருக்கு ருசியே ஏற்படவில்லை. பாட புத்தகங்களை வேண்டா வெறுப்பாகப் படித்துத் தொலைப்பார்; வேறு எந்தப் புத்தகமும் படிக்க மாட்டார்.

இளம் வயதில் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொண்டதைக் காட்டிலும் நாடகம் பார்த்ததின் மூலம் அதிகம் கற்றுக் கொண்டார். மோகன்தாஸ் குழந்தையாயிருந்தபோது பார்த்த நாடகங்களில் "சிரவண பித்ரு பக்தி நாடகம்" என்பது ஒன்று. கண் இழந்த முதியோர்களான தன் பெற்றோர்களைச் சிரவணன் என்பவன் காவடியில் வைத்துத் தூக்கிக்கொண்டு சென்ற காட்சி மோகன்தாஸின் இளம் உள்ளத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. "பெற்ற தாய்க்கும் தகப்பனுக்கும் இப்படியல்லவா சேவை செய்ய வேண்டும்?" என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டார்.

அவர் பார்த்த இன்னொரு நாடகம் அரிச்சந்திர நாடகம். அதை எத்தனை தடவை பார்த்தாலும் மோகன்தாஸுக்குச் சலிப்புத் தட்டுவதே இல்லையாம். "அரிச்சந்திரனைப்போல் ஏன் எல்லோரும் சத்திய சந்தர்களாயிருக்கக் கூடாது?" என்று அடிக்கடி எண்ணமிடுவாராம். அரிச்சந்திரனுடைய கதையை நினைத்து நினைத்து மனமுருகி அழுவாராம். சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக அரிச்சந்திரன் பட்ட கஷ்டங்களையெல்லாம் தாமும் அநுபவிக்க வேண்டும் என்ற இலட்சியம் குழந்தை காந்தியின் மனதில் குடிகொண்டதாம்.

ஆகா! அந்த இலட்சியம் காந்திஜியின் வாழ்க்கையில் எவ்வளவு நன்றாக நிறைவேறிப் பூர்த்தியடைந்துவிட்டது? அரிச்சந்திரன் சத்தியத்துக்காகச் செய்த தியாகங்களையும் அநுபவித்த கஷ்டங்களையும்விட மகாத்மா செய்த தியாகங்களும் அநுபவித்த கஷ்டங்களும் அதிகமேயல்லவா? கடைசியில் சத்தியத்துக்காக மகாத்மா காந்தி தமது உயிரையே தியாகம் செய்துவிட்டாரே!

இவ்விதம் இளம்பிராயத்திலேயே சத்தியத்தில் அழியாத நம்பிக்கை கொண்ட மகாத்மா காந்தி தம் சுயசரிதத்தை எழுது

வதில் சத்தியத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்திருக்கிறார். பதின்மூன்று வயதில் தமக்குக் கலியாணம் நடந்ததைப்பற்றி மிக்க வருத்தத்தோடு எழுதியிருக்கிறார்.

ஆம், தம்பி! காந்தி மகானுக்குக் கலியாணம் நடந்தபோது அவருக்கு வயது பதின்மூன்று; அன்னை கஸ்தூரி பாய்க்கும் அப்போது வயது பதின்மூன்றுதான்.

அந்தக் காலத்தில் கலியாணம் நடத்துவதென்றால் மிகவும் சிரமமான காரியமாம். ஆகையால் மோகன் தாஸுக்கும் அவருடைய தமையனுக்கும் இன்னொரு சித்தப்பாவின் புதல்வருக்கும் சேர்த்து ஒரே முகூர்த்தத்தில் கலியாணம் நடத்தி விடத் தீர்மானித்தார்களாம். எப்படியிருக்கிறது கதை! அந்தக் காலத்து வழக்கமும் அந்த நாட்டுச் சம்பிரதாயமும் அவ்வாறிருந்தன.

ஆனால் இது விஷயத்தில் காந்தி மகானுடைய கருத்து என்ன வென்பதை நீ நன்கு தெரிந்து கொள்ள வேண்டும், தம்பி! ஆண்களுக்கு ஆகட்டும், பெண்களுக்கு ஆகட்டும், இளம் வயதில் கலியாணம் செய்வித்தல் கூடவே கூடாது என்பது மகாத்மாவின் உறுதியான கொள்கை.

இளம் வயதில் தமக்கு மணம் செய்விக்கப்பட்டது பற்றி மகாத்மா பிற்காலத்தில் பச்சாத்தாபப்பட்டார்; நினைத்து நினைத்து வருந்தினார்; கலியாணம் செய்து வைத்த தம் தந்தையையும் நொந்து கொண்டார். ஆனால், கலியாணம் நடந்த சமயத்தில் அது பிசகு என்பதாகவே அவருக்குத் தோன்றவில்லை. கஸ்தூரி பாயிடம் மிக்க அன்பாக இருந்தார். கஸ்தூரிபாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாது. எழுதவும் படிக்கவும் தமது அருமை மனைவிக்குக் கற்பிக்க விரும்பினார். ஆனால் மனைவியிடம் தாம் கொண்டிருந்த அதிகமான அன்பே படிப்புச் சொல்லிக் கொடுக்கத் தடையாயிருந்தது என்று காந்திஜி எழுதியிருக்கிறார்.

3. சத்தியம் காத்தது

காந்தி மகாத்மாவுக்குச் சிறு பிராயத்திலேயே சத்தியத்தில் பற்று உண்டாயிற்று என்று சொன்னேனல்லவா? அந்தச் சத்தியப் பற்று அவர் பல தீமைகளுக்கு உள்ளாகாமல் அவரைக் காத்தது.

இளம் பிராயத்தில் மோகன்தாஸ் காந்திக்குச் சிநேகிதர்கள் அதிகம் பேர் இல்லை. ஒரே ஒரு சிநேகிதன் கிடைத்தான். ஆனால் அவனுடைய சிநேகம் துஷ்ட சகவாசமாக முடிந்தது.

குஜராத் — கத்தியவார் பிரதேசங்களில் ஜைனர்கள் அதிகம் பேர் உண்டு. ஜைன மதம் ஜீவகாருண்யத்தை வற்புறுத்தும் மதம் அல்லவா? ஆகையால் ஜைனர்கள் புலால் உண்ண மாட்டார்கள். அதைப் போலவே அந்தப் பிரதேசத்து வைஷ்ணவர்களும் புலால் உணவை வெறுத்தார்கள். நமது தமிழ்நாட்டில், புலால் இல்லாமல் தானியம் — கறிகாய் மட்டும் உண்பதைச் 'சைவம்' என்று சொல்கிறோம். குஜராத்திலோ வைஷ்ணவர்கள்தான் 'சைவ' உணவில் வைராக்கியம் உள்ளவர்கள்!

காந்திஜியின் வம்சத்தார் வைராக்ய சீலமுள்ள வைஷ்ணவர்கள். ஆகையினால் அவர்களுடைய வீட்டில் மாமிச உணவு கிடையாது. அந்தக் காலத்தில் 'புலால் உணவு சாப்பிட்டால்தான் தேகபலம் விருத்தியாகும்' என்று ஒரு தவறான பிரசாரம் குஜராத்தில் பரவி வந்தது. காந்தி மகானுடைய இளம்பிராய நண்பன் அந்தப் பிரசாரத்துக்குப் பலியானவன். காந்திஜிக்கும் அதைப் போதனை செய்தான். "இங்கிலீஷ்காரனைப் பார்! அவன் எவ்வளவு பலசாலியாக இருக்கிறான்! இதற்குக் காரணம் அவன் மாமிசம் சாப்பிடுவதுதான்! அதனாலேயே அவன் இந்தியா தேசத்தை அடிமைப்படுத்தி ஆள்கிறான்!" என்று அந்த சிநேகிதன் காந்திஜியிடம் அடிக்கடி சொன்னான். அது உண்மையாயிருக்கலாம் என்று காந்திஜியும் நம்பத் தொடங்கினார். இந்தியர்கள் எல்லாரும் புலால் உண்ணத் தொடங்கி விட்டால் ஆங்கிலேயரை இந்தியா தேசத்திலிருந்து துரத்தி விடலாமென்று எண்ணினார்.

கடைசியாக ஒருநாள், அந்தச் சிநேகிதன் புலால் உணவுக்கு ஏற்பாடு செய்தான். அவன் கொண்டு வந்த உணவை ஆற்றங்கரையில் தனிமையான ஓர் இடத்தில் உட்கார்ந்து இருவரும் சாப்பிடத்

தொடங்கினார்கள். மோகன் தாஸுக்கு அது பிடிக்கவேயில்லை. புலால் உணவும் அவருக்குப் பிடிக்கவில்லை; பெற்றோர்களுக்குத் தெரியாமல் இரகசியமாக அந்தக் காரியம் செய்வதும் பிடிக்கவில்லை.

அன்று இரவெல்லாம் மோகன்தாஸ் நன்றாகத் தூங்கவில்லை. கொஞ்சம் கண்ணயர்ந்தால் அவருடைய வயிற்றுக்கு உள்ளே உயிருள்ள ஆடு ஒன்று இருந்து பரிதாபமாகக் கத்துவது போலத் தோன்றுமாம்! உடனே தூக்கிவாரிப் போட்டு எழுந்து உட்காருவாராம்! அன்று மாலையில் தாம் செய்த காரியத்தை நினைத்து வருந்துவாராம். பிறகு இந்திய தேசத்தின் விடுதலைக்காக மாமிசம் சாப்பிடுவது தமது கடமை என்று எண்ணிச் சிறிது தைரியப்படுத்திக் கொள்வாராம்.

இன்னும் இரண்டு மூன்று தடவை இம்மாதிரி முயற்சி நடந்த பிறகு, முடிவாக இந்தக் காரியம் வேண்டாம் என்று மோகன்தாஸ் நிறுத்தி விட்டார். இதற்கு முக்கிய காரணம், பெற்றோர்களுக்குத் தெரியாமல் இந்தக் காரியம் செய்ய வேண்டியிருக்கிறதே என்ற எண்ணந்தான். மோகன்தாஸ் பொய் சொல்லுவதை வெறுத்தார்; அதைக்காட்டிலும் பெற்றோர்களிடம் பொய் சொல்லுவதைப் பதின்மடங்கு அதிகமாக வெறுத்தார். இவ்விதம் சத்தியத்தில் அவருடைய பற்றுக் காரணமாக இரகசியமாகப் புலால் உண்ணும் காரியம் நின்றது. தமக்கு வயது வந்து சுதந்திர வாழ்க்கை நடத்தும்போது புலால் உணவைப் பார்த்துக் கொள்ளலாம் என்று அச்சமயம் காந்திஜி எண்ணினார். ஆனால் அந்தக் கொள்கையே தவறானது என்று வயது வந்ததும் அறிந்தார். தேக பலத்துக்கோ ஆரோக்யத்துக்கோ மாமிச போஜனம் அவசியமில்லையென்பது பிற்காலத்தில் மகாத்மாவின் உறுதியான கொள்கை. இங்கிலாந்தில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்தபோதும் தென்னாப்பிரிக்காவில் பல வருஷம் வாழ்ந்தபோதும் கூட மகாத்மா 'சாகபட்சணி'யாகவே இருந்தார். அவ்விதம் சைவ உணவு அருந்தியே மகாத்மா 79 வயது வரையில் திடகாத்திரமாக இருந்தார் அன்றோ?



பட்டுச் சட்டையும் மாணப்பூக் குல்லாவும் அணிந்து......

பள்ளிக்கூடத்துக்குச் சென்ற பாலர் மோகன்தாஸ்

இன்னொரு விஷயத்தையும் உனக்கு இப்போதே சொல்லி விடுகிறேன், தம்பி! மகாத்மா காந்தி புலால் உணவை வெறுப்பவர்; அதனால் புலால் உண்பவர்களையெல்லாம் அவர் வெறுப்பதில்லை. சைவ உணவுதான் நல்ல உணவு — சாத்வீக உணவு — ஆரோக்கியத்துக்கு உகந்த உணவு என்பது அவருடைய உறுதியான கொள்கை. இது காரணமாக, சைவ உணவு அருந்தாமல் வேறு உணவு அருந்துவோரைக் கீழானவர்கள் என்று மகாத்மா நினைப்பதில்லை.

4. அறிவின் உதயம்

தீய்ப்ப சகவாசத்தின் காரணமாக காந்திஜிக்கு இளம்பிராயத்தில் இன்னொரு விபத்து நேர்ந்தது. மற்றொரு நண்பனோடு சேர்ந்து இரகசியமாகச் சுருட்டுக் குடிக்க ஆரம்பித்தார். அதில் சுகம் ஒன்றும் அவர் காணவில்லை. சுருட்டுக் குடிப்பது ஒரு நாகரிகம் என்னும் எண்ணத்தினால் அந்தப் பழக்கம் ஆரம்பமாகிச் சிலகாலம் நடந்தது. சுருட்டு வாங்குவதற்குப் பணம் வேண்டியிருந்தது; கடனும் ஏற்பட்டது. கடைசியாக அவருடைய மூத்த சகோதரர் கையில் அணிந்திருந்த தங்கக் காப்பிலிருந்து ஒரு



ஹைஸ்கூல் மாணாக்கர் - கஸ்தூரிபாய் கணவர்

துண்டு வெட்டி எடுக்கவும் நேர்ந்தது. ஆனால் இப்படிச் செய்த குற்றம் காந்திஜியின் உள்ளத்தை மிகவும் உறுத்திற்று. மன வேதனையைத் தாங்க முடியவில்லை. கடைசியாக, செய்த குற்றம் எல்லாவற்றையும் தகப்பனாரிடம் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பது என்று தீர்மானித்தார். நேரில் சொல்லுவதற்குத் துணிச்சல் வரவில்லை. ஆகையால் ஒரு கடிதத்தில் தாம் செய்த குற்றத்தை விவரமாக எழுதி அதற்குத் தகுந்த தண்டனை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நோய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருந்த தகப்பனாரிடம் கடிதத்தைக் கொடுத்து விட்டு அவர் படுத்திருந்த பலகைக்கு எதிரே உட்கார்ந்து கொண்டார். தம்பி! பிறகு என்ன நடந்தது என்பதை மகாத்மாவே தமது சுய சரிதத்தில் சொல்கிறார், கேள்:—

"அவர் கடிதத்தை முற்றும் படித்தார். படிக்குங் காலையில் அவர் கண்களிலிருந்து கண்ணீர் முத்து முத்தாக வழிந்தது. கடிதமும் நனைந்து போயிற்று. ஒருகண நேரம் அவர் கண்ணை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்; பின்னர் கடிதத்தைக் கிழித்துப் போட்டார். கடிதத்தைப் படிப்பதற்காக எழுந்து உட்கார்ந்தவர் மீண்டும் படுத்துக் கொண்டார். நானும் அழத் தொடங்கினேன். அவரது அளவில்லாத மன வேதனையை உணர்ந்தேன். நான் சித்திரக் கலைஞனாயிருந்தால் அந்தக் காட்சியை இன்று படமாக எழுதி விடுவேன். இன்னும் என் மனக் கண்ணின் முன்பு அந்தக் காட்சி அவ்வளவு தெளிவாகக் காணப்படுகிறது.

"அந்த அன்புக் கண்ணீர்த் துளிகளினால் என் இருதயம் சுத்தமாயிற்று; பாவம் நீங்கிற்று. அத்தகைய அன்பை அனுபவித்தோர் மட்டுமே அதன் இயல்பை உணர்தல் கூடும்.

"இது எனக்கு அஹிம்ஸா தர்மத்தில் ஓர் உதாரண பாடமாக இருந்தது. அந்தக் காலத்தில் இந்த நிகழ்ச்சியில் என் தந்தையாரின் அன்பை மட்டுமே கண்டேன். இன்றைய தினமோ அது சுத்த அஹிம்சையே அன்றி வேறில்லை என்பதை அறிந்துள்ளேன். அத்தகைய அஹிம்சா தர்மம் உலகம் அனைத்தையும் தழுவி நிற்பது. தான் தொட்டதை யெல்லாம் பொன்னாக்கி விடும் இயல்பு கொண்டது. அதன் ஆற்றலுக்கு அளவு ஏது?

"இத்தகைய உன்னதமான மன்னிக்கும் குணம் என் தந்தைக்கு இயல்பாக ஏற்பட்டதன்று. அவர் கோபங் கொண்டு கடுஞ்சொல் மொழிவாரென்றும், நெற்றியில் புடைத்துக் கொள்வார் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் அவருடைய சாந்தம் எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. நான் ஒளியாது என் குற்றத்தை ஒப்புக் கொண்டதே இதற்குக் காரணம் என்று நம்புகிறேன். மன்னிப்பதற்கு உரிய பெரியோரிடம் குற்றத்தை ஒளியாது ஒப்புக் கொள்வதும், இனிமேல் குற்றம் செய்வதில்லை என்று உறுதிமொழி கூறுவதுமே குற்றத்தைப் போக்கிக் கொள்வதற்குச் சிறந்த பிராயச் சித்தமாகும். நான் எனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பயனாக என்னைப்பற்றி என் தந்தைக்குக் கவலையே இல்லாமல் போயிற்று. என்னிடம் அவர் கொண்டிருந்த அன்பும் அளவு கடந்து பெருகிற்று."

இவ்விதம் மகாத்மா காந்தி இளம் பிராயத்தில் சத்தியத்தில் கொண்ட பற்று பல தீமைகள் அவருக்கு ஏற்படாமல் பாதுகாத்தது மட்டுமல்ல; அந்த சத்தியப் பற்றிலிருந்தே அஹிம்சையின் பெருமையும் அவருக்கு விளங்கலாயிற்று. நாளடைவில் சத்தியமும் அஹிம்சையும் அவருடைய வாழ்க்கையாகிய வண்டிக்கு இரண்டு சக்கரச் சுவடுகளாக அமைந்தன. பிற்காலத்தில் மகாத்மா செய்து முடித்த அரும் பெரும் காரியங்களுக்கெல்லாம் சத்தியமும் அஹிம்சையுமே அடிப்படையாயிருந்தன.

5. பயத்துக்கு மருந்து

மோகன்தாஸ் காந்தி இளம்பிள்ளையாயிருந்தபோது கோவிலுக்குப் போவதுண்டு. ஆனால் கோவிலில் குடிகொண்டிருந்த ஆடம்பரங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. உண்மையான தெய்வ பக்தியோ சமயப் பற்றோ ஆலயங்களில் அவருக்கு ஏற்படவில்லை.

வீட்டு வேலை செய்த ஒரு பெண்மணியிடம் தெய்வம், சமயம் - இவைகளைப் பற்றிய உண்மைகளை மோகன்தாஸ் அறிந்தார். அந்த வேலைக்காரியின் பெயர் அரம்பை. காந்திஜி குழந்தையாயிருந்தபோது அவரை எடுத்து வளர்த்த செவிலித் தாயும் இந்த அரம்பை என்னும் பெண் தெய்வந்தான்.

காந்திஜி குழந்தையாயிருந்த காலத்தில் அவருக்குப் பேய், பிசாசுகளிடம் பயம் அதிகமாம். இதோடு பாம்பு பயமும் திருடர் பயமும் சேர்ந்து கொள்ளுமாம். இருட்டைக் கண்டே பயப்படுவாராம். இருட்டில் அவரால் தூங்க முடியாதாம். கண்ணை மூடினால் ஒரு பக்கத்திலிருந்து பிசாசுகளும் இன்னொரு திசையிலிருந்து பாம்புகளும் மற்றொரு திக்கிலிருந்து திருடர்களும் உருவதாகத் தோன்றுமாம்!

இப்படிப்பட்ட பயத்தைப் போக்குவதற்கு மருந்தாக வேலைக்காரி அரம்பை ஸ்ரீராம நாமத்தின் மகிமையைக் குழந்தை மோகனதாஸுக்குக் கூறினாள். அதன்படி ஸ்ரீராமஜபம் செய்து காந்திஜி பேய் பிசாசு பயத்தைப் போக்கிக் கொண்டார். ஆனால் அத்துடன் ராமநாமத்தின் மகிமை தீர்ந்து போய் விடவில்லை.

“இளம் பிராயத்தில் அந்த உத்தமி அரம்பை விதைத்த விதை வீண் போகவில்லை. இன்றைக்கும் ஸ்ரீராமநாமம் எனது அருமருந்தாக இருந்து வருகிறது!” இவ்விதம் மகாத்மா காந்தி 1928-ம் ஆண்டில் எழுதினார். கானது 1948-ம் ஆண்டில் காந்தி மகானுடைய அந்திம யாத்திரை தொடங்கிய ஜனவரி 30உயன்றும் ஸ்ரீராமநாமம் அவருக்கு அருமருந்தாக உதவியது.

பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்திருந்த அந்தப் பாதகன் துப்பாக்கியால் சுட்ட உடனே “ராம் ராம்” என்று சொல்லிக் கொண்டு மகாத்மா காந்தி தரையில் சாய்ந்தார். அடுத்த கணமே அந்த மகா பக்தருடைய உயிர் ஸ்ரீராமனுடைய பாதாரவிந்தங்களை அடைந்தது.

கோடி கோடி ஜனங்கள் ஜனவரி 30உ மாலை யிருந்து பிப்ரவரி 12உ வரையில் மகாத்மா காந்தியினிடத்தில் தாங்கள் கொண்ட பக்தியின் காரணத்தினால் “ரகுபதிராகவ ராஜா ராம்” என்று ஸ்ரீராம நாம பஜனை செய்தார்கள்.

வால்மீகியும், கம்பரும், துளசி தாஸரும், கபீரும், தியாகராஜ ஸ்வாமியும் எந்த இராமனைப் போற்றிப் பாடினார்களோ, அந்த இராமனுடைய திருநாமம் காந்தி மகானுடைய ஆத்ம சக்தியினால் கோடானு கோடி மக்களின் நாவில் சென்று பதினாறு தினங்கள் குடிகொண்டிருந்தது. * * * *

அடாடா! எங்கிருந்து எங்கே வந்து விட்டேன்? தம்பி! காந்தி மகான் பிறந்த



தந்தை காபா காந்திக்குப் பணிவிடை செய்து மகிழ்ந்த தனயர் மோகன காந்தி

காந்தி அஞ்சலி — 3

காந்தி என்னும் ஜோதி

பிரான்சு தேசத்தில் சமீபகாலத்தில் வாழ்ந்த மாபெரும் ஆசிரியரும் முனிவருமான ரோமன் ரோலந்து கூறியதாவது:—

"காந்திஜி இந்தியா தேசத்துக்கு மட்டும் உரியவர் அல்ல. இந்திய மக்களிடையே ஐக்கிய பாவத்தை உண்டாக்கி, சுதந்திரம் அடைவதென்ற திட சங்கல்பத்தை அவர்களுக்கு ஊட்டியவர் மாத்திரம் அல்ல. மேல்நாட்டு மக்கள் மறந்து கைவிட்டுவிட்ட ஏசுநாதருடைய உபதேசத்தை மீண்டும் எடுத்துச் சொல்லவே அவர் வந்தார். இதற்குமுன் மனித குலத்தில் அவதரித்த முனி சிரேஷ்டர்களில் அவரும் ஒருவராகிவிட்டார். அவருடைய ஜோதி இந்தப் பூவுலகெங்கும் பரவிச் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது."

ஊருக்கு மறுபடியும் போகலாம், வா! மகாத்மாவின் தகப்பனார் நோய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடந்தார் என்று சொன்னேனல்லவா? அப்போது லதா மகாராஜ் என்னும் இராமபக்தர் அவர் வீட்டுக்கு வந்து துளசிதாஸ் ஹிந்தி பாஷையில் இயற்றியிருக்கும் இராமாயண கீதங்களைப் பாடினார். பாடிய பிறகு பாட்டுக்குப் பொருளும் கூறினார். அப்போது அவரும் மெய்மறந்தார்; கேட்டுக் கொண்டிருந்தவர்களும் மெய்மறந்தார்கள். மெய்மறந்து பரவசமானவர்களில் இளம்பிராயத்துக் காந்திஜியும் ஒருவர். இராமாயணத்திலும் இராமனிடத்திலும் மகாத்மா காந்தி கொண்ட அளவிலாத பக்திக்கு அப்போதே விதை போட்டாயிற்று.

ஆனால் மகாத்மாவின் இராம பக்தியானது அவரை மற்ற தெய்வங்களையோ மதங்களையோ வெறுக்கும்படியாகச் செய்யவில்லை. எல்லா மதங்களும் கடவுளை அடையும் மார்க்கங்கள்தான் என்னும் சமரசக் கொள்கையில் மகாத்மா உறுதி கொண்டவர். இந்தக் கொள்கையின் வித்தும் மகாத்மாவின் இளம் பிராயத்திலேயே அவருடைய மனதில் விதைக்கப் பட்டது.

காந்திஜியின் பெற்றோர்கள் ஹிந்து மதத்தின் உட்பிரிவுகள் சம்பந்தமாக வேற்றுமை பாராட்டுவதில்லை. சைவ-வைஷ்ணவச் சண்டைகள், தென்கலை-வடகலைச் சண்டைகள் முதலியவற்றை அவர்கள் அறிய மாட்டார்கள். விஷ்ணு கோவிலுக்குப் போவதுபோலவே சிவன் கோவிலுக்கும் போவார்கள். அவர்களுடைய வீட்டுக்கு ஜைன சமயப் பெரியோர்கள் அடிக்கடி வருவார்கள்; அவர்களுடன் அமர்ந்து போஜனமும் செய்வார்கள்.

இன்னும், காந்திஜியின் தந்தைக்கு முஸ்லிம் நண்பர்களும் பார்ஸி நண்பர்களும் பலர் உண்டு. அவர்களும் அடிக்கடி வீட்டுக்கு வருவார்கள். மதங்களைப் பற்றிய சம்பாஷணைகள் நடைபெறும். நோய்ப்பட்டிருந்த தம் தந்தைக்குப் பணிவிடை செய்து கொண்டே மோகன்தாஸ் காந்தி மேற்படி சம்பாஷணைகளைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருப்பார். இதன்பயனாக "எல்லா மதங்களும் கடவுளுக்கு உகந்த மதங்களே!" என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று.

ஆனால் கிறிஸ்தவ மதத்தின் மேல் மட்டும் காந்திஜிக்கு அந்த நாளில் சிறிது வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இதற்குக் காரணம், பள்ளிக்கூடத்துக்கு அருகில் தெரு மூலைகளில் நின்றுகொண்டு கிறிஸ்துவப் பாதிரிமார்கள் செய்த பிரசங்கங்கள் தான். ஹிந்து மதத்தையும் ஹிந்து மதத்துத் தெய்வங்களையும் மேற்படி பாதிரிமார்கள் தூஷணை செய்ததைக் காந்திஜியினால் கேட்க முடியவில்லை. இதே காலத்தில் ஒரு ஹிந்து பிரமுகர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதுபற்றிக் காந்திஜி கேள்விப் பட்டார். அந்த ஹிந்து பிரமுகர் கிறிஸ்துவரானவுடனே மாட்டிறைச்சி தின்னவும் சாராயம் குடிக்கவும் ஐரோப்பியரைப் போல் உடைதரிக்கவும் ஆரம்பித்து விட்டாராம்! அதோடு அந்தப் பிரமுகர் ஹிந்து மதத்தையும் இந்தியா தேசத்தையுமே தூஷிக்கவும் தலைப்பட்டாராம். இதையெல்லாம் அறிந்ததும், "கிறிஸ்தவ மதமும் ஒரு மதமா? இதற்கு மதம் என்ற பெயரே தகாது!" என்று காந்திஜி நினைத்தாராம்.

ஆனால் பிற்காலத்தில் மேற்படி காரியங்களுக்கெல்லாம் கிறிஸ்தவ மதம்

பொறுப்பில்லை யென்றும், கிறிஸ்துவ மதப் பிரசாரகர்களே காரணம் என்று காந்தி மகான் அறிந்து கொண்டார். உண்மையான கிறிஸ்துவ மதம் காந்திஜிக்கு உகந்த மதமாயிற்று. தம்பி! மகாத்மா காந்தியின் மிகச் சிறந்த சிநேகிதர்களில் சிலர் கிறிஸ்துவர்கள் என்பது உனக்குத் தெரிந்திருக்குமே? அமெரிக்கப் பாதிரியாரான ரெவரண்டு ஹோம்ஸ், தீனபந்து ஆண்ட்ரூஸ், பிரெஞ்சுதேசத்துப் பெரும்புலவர் ரோமன் ரோலந்து இவர்கள் எல்லாரும் கிறிஸ்துவர்கள் தான். ஆனால் இவர்கள் காந்திஜிக்கு எவ்வளவு ஆப்த நண்பர்கள்!

வெவ்வேறு மதங்களைப் பற்றி காந்திஜியின் உள்ளம் சிந்தித்துக் கொண்டிருந்த காலத்தில், அற்புதமான தத்துவங்கள் அடங்கிய குஜராத்தி பாஷைப் பாடல் ஒன்று அவருடைய இதயத்தில் குடி கொண்டது. அந்த அருமையான பாட்டின் பொருள் பின் வருமாறு:—

"ஒரு குவளை தண்ணீர் கொடுத்தவனுக்கு ஒரு வேளை விருந்து அளிக்க வேண்டும்.

அன்புடன் உன்னை வரவேற்கும் மனிதனை ஆர்வத்தோடு வணங்க வேண்டும்.

ஒரு காசு உனக்குக் கொடுத்தவனுக்கு ஒரு பொன் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

உன் உயிரைக் காத்து உதவிய நீரனுக்குத் திரும்ப உன் உயிரை அளிக்க எப்போதும் சித்தமாயிருக்க வேண்டும்.

இப்படியெல்லாம் நல்லோர் உபதேசங்களை மதித்து நடப்பவன் ஒன்றுக்குப் பத்து மடங்கு நன்மை அடைவான்.

ஆனால் உண்மையில் 'சான்றோர்' எனப்படுவோரின் இலட்சணம் மேலே சொல்லப் பட்டவை மட்டும் அல்ல.

அவர்கள் மனித குலம் எல்லாம் ஒன்றேன உணர்ந்தவர்கள்; ஆதலின், அவர்களுக்கு ஒருவன் தீங்கு செய்தால், அதற்குப் பதிலாக அவர்கள் நன்மை செய்வார்கள்.

தீமைக்குப் பதில் நன்மை செய்வதிலே அவர்கள் ஆனந்தம் அடைவார்கள்."

தம்பி! மேலேயுள்ள குஜராத்தி கீதத்தில் கடைசி இரண்டு வரிகள் இளம் பிராயத்துக் காந்திஜியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தன. அந்த வரிகளில் அடங்கியிருக்கும் தத்துவமே அவருடைய வாழ்க்கைத் தத்துவமாயிற்று. அதுவே அவரை மகாத்மா காந்தி ஆக்கிற்று. (தொடரும்)

காந்தி அஞ்சலி—4

ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு ராஜாஜி அவர்கள் 4-2-48 ல் எழுதிய கடிதம்:—

"டில்லிக்கு 31ல் காலை புறப்பட்டுப் போனேன்.........தேசத்தின் பொறுப்பை முழுதும் வகித்திருக்கும் என் சகாக்களுக்கு யார் என்ன சொல்லி ஆறுதல் கொடுக்க முடியும்? குழந்தைகளைப் போல ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அழுதோம். மயானத்தில் வெட்கம் என்னத்துக்கு? துக்கத்துக்கு வேறு பாஷை இல்லை.

ஆகா! எவ்வளவு புண்ணியவான்! அவர் அடைந்த மரணத்தைப் பற்றி என்ன சொல்வேன்? நம்முடைய நாளில் ஒருவர்—ராம நாம பஜனை செய்யச் சென்று கொண்டிருந்த சமயம்—பிரார்த்தனைக்குக் காத்திருந்த பக்தர்களின் இரு வரிசையின் மத்தியில்—நின்றபடியே தம் உடலை நீத்து ராமனிடம் நேராகப் போய்ச் சேர்ந்துவிட்டார். ஒரு நிமிஷமும் வியாதியோடு படுத்து 'வெந்நீர் கொண்டுவா!' 'தூக்கிப் பிடி!' என்றெல்லாம் சொல்லாமல்—நடந்த வாக்கில்—ராம பஜனைக்கு ஐந்து நிமிஷம் தாமதம் ஆகிவிட்டதே என்று எண்ணி வேகமாக நடக்கும் சமயத்தில்—மேடையை அடையும் முன்—நேருக்கு நேராக ராமனிடமே சென்று விட்டார். ஒரு குண்டு வயிற்றில் புகுந்ததும் 'ஹே ராமா!' என்றார். உடனே இரண்டு குண்டுகள் மார்பில் பாய்ந்து அவஸ்தையை நிறுத்தி ஆன்மாவை ஆண்டவன் சந்நிதியில் சேர்த்துவிட்டன.

அவரைப்பற்றி வருத்தமே வேண்டாம். கண்ணனை ஒரு வேடனுடைய அம்பு கொண்டேகி விட்டது அந்த நாளில். அது போலவே இன்றும் நடந்தது. அந்தகாரத்தில் கிடக்கும் நம்முடைய கதிதான் பரிதாபம்......

ஏதோ பைத்தியக்காரனைப் போல் கிறுக்கி அனுப்புகிறேன். எனக்குத் தூக்கம் பொறுக்கவில்லை. ஒன்றும் பிடிக்கவில்லை.........."



நம்புவார்களா?

ஜெயமணி வை. சுப்பிரமணியம்

சிறுகுளம் கிராமத்தில், புதிதாக வந்துள்ள அந்தக் குடும்பத்தைப் பற்றி இரண்டு மூன்று நாட்களாக ஒரே பேச்சாக இருந்தது.

தலையாரியின் மாடு கன்று போட்டதைப் பற்றியும், தயிர்க்காரி தங்கம்மாளின் கணவன் என்றைக்கோ ஒரு நாள் அவளை அடித்தது பற்றியும் நாள் கணக்கில் வம்பு அளக்கும் அந்தக் கிராமத்தார், மேற்படி குடும்பத்தை இலகுவில் விட்டுவிடுவார்களா?

“அவனுக்கு வீறிவடங்கன் கிராமமாம். என்ன கேட்டாலும் மௌனம் சாதிக்கிறான், ஊமைக்கோட்டான் மாதிரி! நேற்று அவன் வாயைக் கிண்டிப் பார்த்தேன். ஆள் ரொம்ப அழுத்தம். பத்துக் கேள்வி கேட்டால் ஒரு கேள்விக்குத்தான் வேண்டா வெறுப்புடன் பதில் சொல்கிறான்!” என்றாள் சட்டநாத சாஸ்திரியின் இரண்டாவது மனைவி ப்ரகுஜம்.

“அந்த இரண்டு குழந்தைகளையும் பார்த்தாயா? மூஞ்சியில் தரித்திரக்களை வழிகின்றது” என்று வர்ணித்தாள் ஓர் அம்மணி.

“அது மாத்திரமா? அதுகளின் வயிற்றைப் பாரேன்; என்னைப் போட்டுப் புதைக்கலாம் போலிருக்கிறது! இந்த ஏழைப் பிணங்களுக்கே வயிறு பெரிதாகத்தா னிருக்கும்.”

மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்துக்குக் கோவில் காரியம் பார்க்கும் சாம்புவின் தர்மபத்தினி மேற்கூறிய விதம் அலுத்துக் கொண்டாள்.

இதே தோரணையில் மற்றும் இரண்டொருவர் தங்கள் தங்களுடைய ‘பெருந்தன்மையான’ அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

“ஐயோ, பாவம்! அவனுக்கு என்ன கஷ்டமோ? நானும் பார்த்தேன். அவன் ரொம்ப ஏழைபோலிருக்கு. முகத்தில் வேதனை தாண்டவமாடுகிறது” என்று அனுதாபப் பட்டாள் ஒரு பாட்டியம்மாள்.

“ஒருவேளை பிரசவ வேதனையாக இருக்கும்!” என்று ப்ரகுஜம் சொல்லி, விஷமத்தனமான ஒரு விதப் புன்சிரிப்புடன் மற்றவர்களைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள்.

நவீன உலகத்தில் இருக்கத் தகுதியற்ற அந்த அசட்டுப் பாட்டிக்கு, ப்ரகுஜம் அளித்த சரியான பதிலைக் கேட்டதும் எல்லோரும் ‘கொல்’லென்று சிரித்தார்கள்.

★

அவர்கள் பேசிக் கொண்டிருந்தது மீனுவையும் அவளுடைய இரண்டு குழந்தைகளையும் பற்றித்தான்.

1941-ம் வருஷத்திலே மூண்ட கிழக்கு ஆசியா யுத்தத்தின் விளைவாகச் சின்னா பின்னமான பதினாயிரக்கணக்கான குடும்பங்களுள் மீனுவின் குடும்பமும் ஒன்று. மீனுவின் கணவனான காப்டன் சுந்தர், 1941-ம் வருஷ ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்துடன் சிங்கப்பூருக்குச் சென்றார்.

மலாயாவையும் மலாயாவிலுள்ள இந்தியர்களையும் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசிய மென்றும், மலாயாவை இழந்து விட்டால் பிறகு ஜப்பானியர்

நிச்சயமாக இந்தியாமீது படையெடுத்து விடுவார்களென்றும் கூறியே பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள், குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த இந்தியத் துருப்புகளைச் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஆனால், சில மாதங்கள் சென்றபின், பிரிட்டிஷார் அந்தத் துருப்புகளை ஆஸ்திரேலியா அல்லது ஹாங்காங்கிற்கு அனுப்ப முற்பட்டபோதுதான் தகராறு ஏற்பட்டது.

மலாயாமீது படையெடுப்பவர்களை எதிர்த்துத் தாங்கள் யுத்தம் செய்யத் தயாரென்றும், ஆனால் ஆஸ்திரேலியாவுக்கோ அல்லது ஹாங்காங்கிற்கோ தாங்கள் செல்ல முடியாதென்றும் சுமார் ஆயிரத்து நூறு இந்தியச் சிப்பாய்களடங்கிய அந்தப் பிரிவினர் மறுத்துவிட்டனர். அவ்வாறு மறுத்தவர்களில் காப்டன் கந்தரும் ஒருவர்.

அவர்கள் அவ்விதம் மறுத்தது பிரிட்டிஷ் அதிகாரிகளைத் தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் அந்தச் சிறிய பொறி பரந்த முறையில் மற்றொரு சிப்பாய்க் கலகத்துக்கான அறிகுறியோ என்று அவர்கள் நடுங்கி விட்டார்கள். யுத்த காலத்தில் அத்தகைய நிலைமையை வளர விடலாமா? ஆகையால் அந்தப் பொறியுடன் விளையாட அவர்கள் விரும்பவில்லை. உடனே ஒரு யுக்தி செய்தனர்.

“சரி ஆஸ்திரேலியா அல்லது ஹாங்காங்கிற்குச் செல்ல விரும்பவில்லையெனில், நீங்கள் மலாயாவில் இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்களெல்லோரையும் திரும்பவும் இந்தியாவுக்கே கொண்டுபோய் விட்டு விடுகிறோம்” என்று சாந்தமாகக் கூறினர் பிரிட்டிஷ் அதிகாரிகள்.

ஆனால் அந்த அதிகாரிகளின் ஹிருதயத்தில் கொழுந்துவிட்ட வஞ்சக் களை இந்தியச் சிப்பாய்கள் எப்படி அறிய முடியும்?

துரதிர்ஷ்டவசமாக இந்தியத் துருப்புகளும் அதற்கு இசைந்து விட்டார்கள்.

★

மேற்படி சம்பவம் நிகழ்ந்த சில தினங்களுக்குப் பின் ‘ஸ்ரீதர்’ என்ற கப்பல் சிங்கப்பூர் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்தது. மேலே குறிப்பிட்ட ஆயிரத்து நூறு சிப்பாய்களையும் ஏற்றிச் செல்லவே அது தயாராக நிற்பதாய் அறிவிக்கப்பட்டது.

அது புறப்படுவதற்கு முதல் நாள் காப்டன் கந்தரும் அவருடைய நண்பர்களில் சிலரும் வேடிக்கையாக துறைமுகத்துக்குச் சென்றிருந்தனர். அப்போது ஓரிடத்தில் திடீரென்று கந்தர் பின் தங்கியதைக் கண்டதும், மற்றவர்கள் வழியில் ஏதாவது வெடிகுண்டு கிடக்கிறதோ வென்று பயந்து விட்டார்கள்.

“அதோ பாருங்கள்!” என்று கந்தர் சுட்டிக் காட்டிய திசையை அவர்கள் நோக்கினர். அங்கு ஓர் எலி ஓடிக் கொண்டிருந்ததைத் தவிர அவர்கள் வேறொரு அதிசயத்தையும் காணவில்லை.

“என்னப்பா சங்கதி?” என்றார் ஒருவர்.

“அந்த எலி ‘ஸ்ரீதர்’ கப்பலின் படிக்கட்டு வழியாகவே கரைக்கு ஓடி வந்தது!”

இவ்வாறு காப்டன் கந்தர் கூறியதும் மற்றவர்கள் விஷயத்தைப் புரிந்து கொண்டு இடி இடி யென்று சிரித்தனர்.

ஒரு கப்பலிலிருந்து எலி கரைக்கு ஓடி வந்தால், அது அதி சீக்கிரத்தில் அந்தக் கப்பலுக்கு ஆபத்து வரும் என்பதைக் குறிப்பிடுகிறதாம். அந்த ஆபத்தை முன் கூட்டியே அறிந்து



கொன்றும் அபூர்வ சக்தி எலிக்கு வாய்த்திருப்பது விசித்திரங்களில் ஒன்றென்பது சிலருடைய கருத்து. அவ்வாறு முன் கூட்டியே எலிகளால் எச்சரிக்கப்பட்ட சில கப்பல்கள் மூழ்கியிருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

ஆனால் காப்டன் கந்தரின் நண்பர்களுக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை. அதனால்தான் எலி ஓடி வருவதைப் பார்த்துப் பயந்த காப்டன் கந்தரின் கோழைத்தனத்தைக் கண்டு அவர்கள் பரிகாசம் செய்தார்கள்.

எனினும் அவர்கள் என்ன சொல்லியும் கந்தருக்குச் சமாதானம் ஏற்படவில்லை. அவருடைய மனத்தில் பெரும் பீதி குடிகொண்டது. தனக்கும் தனது நண்பர்களுக்கும் ஏதோ பிரமாதமான ஆபத்து ஏற்படப் போவதாக அவருக்குத் தோன்றியது.

அன்றிரவு அவர் தூங்கவில்லை. விடியற்காலம் எழுந்து எங்கேயோ சென்றுவிட்டார். அவர் சென்ற இடமும் யாருக்கும் தெரியாது.

★

அதிகாரிகள் குறிப்பிட்டிருந்த அதே தினத்தில் நூற்றுக்கணக்கான இந்தியச் சிப்பாய்களுடனும், சில ஐரோப்பியர்களுடனும் 'ஸ்ரீதர்' கப்பல் இந்தியாவுக்குப் புறப்பட்டது. அது துறைமுகத்திலிருந்து ஐந்து மைல் தூரம் கூடச் சென்றிராது. திடீரென்று பயங்கரமான ஒரு சப்தம்—அவ்வளவுதான்! அந்தக் கப்பல் இரண்டாகப் பிளந்து சில நிமிஷ நேரத்தில் பாதாளத்துக்குச் சென்றுவிட்டது!

அதிலிருந்த இந்தியச் சிப்பாய்கள் சகலரும் மூழ்கி மாண்டனர்! ஐரோப்பியர்கள் சகலரும் காப்பாற்றப் பட்டனர்!

சிங்கப்பூர் தற்காப்புக்காகப் பிரிட்டிஷாரால் போடப்பட்டிருந்த கடற் கண்ணிகள் ஒன்றில் மோதிய 'ஸ்ரீதர்' கப்பல் மூழ்கியது. கடற் கண்ணிகள் போடப்பட்டிருந்த திசைகளை மாலுமிகள் நன்கறிவர். அப்படியிருந்தும் அந்தக் கப்பல் மூழ்கிய மர்மம் என்ன?

தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியாத இந்தியச் சிப்பாய்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் வேண்டுமென்றே அவ்வாறு பலி கொடுத்ததாக ஒரு வதந்தி உலாவியது. மூழ்கிய கப்பலிலிருந்து ஐரோப்பியர்கள் மாத்திரம் மீட்கப்பட்டது, மேற்படி வதந்தியை உறுதிப்படுத்தியது.



அந்தச் சம்பவத்தையொட்டி, சிங்கப்பூரில் விசாரணையும் நடந்தது. விசாரணையின் முடிவு எப்படியானால் என்ன? போன நூற்றுக் கணக்கான இந்தியச் சிப்பாய்களின் உயிர்கள் போனதுதான்!

★

'ஸ்ரீதர்' கப்பலுடன் மூழ்கி இறந்தவர்கள் அடங்கிய ஜாபிதாவில் காப்டன் கந்தரின் பெயரும் இருந்தது! மீனுவுக்குச் கந்தர் மாதா மாதம் அனுப்பி வந்த தொகை அதிலிருந்து நின்றுவிட்டது. காப்டன் கந்தர் மரணத்தைப் பற்றி அதிகார பூர்வமாகவும் சர்க்காரிடமிருந்து மீனுவுக்குத் தகவல் கிடைத்தது. எனவே, அதற்கு மேல் சந்தேகம் எதுவும் எழ இடமில்லையல்லவா?

மீனுவின் உறவினர் முயற்சியெடுத்துக் கொண்டதால், அவளுடைய குடும்பத்துக்கு அரசாங்

கத்திலிருந்து ஈடுத்தொகை கிடைத்திருக்கும். சுபீட்சமாகவும் செல்வத்துடனும் வாழும் மீனுவின் நெருங்கிய உறவினர்கள், தங்களுடைய போக போக்கியங்களிலேயே லயித்துக் கிடந்தார்கள். அவர்கள் மீனுவுக்கு உதவி புரியவில்லை. ஈடுத்தொகை கிடைக்கவும் முயற்சியெடுத்துக் கொள்ளவில்லை.

அதன் விளைவாக அந்தப் பெண்மணியும் அவளுடைய இரு குழந்தைகளும் பல வருஷங்கள் வரையில் பட்ட கஷ்டம் அந்தப் பரந்தாமனுக்குத்தான் தெரியும். கஷ்டமும் அவமானமும் சகிக்க முடியாமல்தான் அவள் வீநிவடங்கன் கிராமத்துக்கு ஒரு ஸ்நானம் செய்துவிட்டு, சிறுகுளத்துக்கு வந்து சேர்ந்தாள். அங்கு ஏதாவது கூலி வேலை செய்து குழந்தைகளைக் காப்பாற்றலாம் என்பது அவளுடைய நினைப்பு.

★

கிழக்கு ஆசியா யுத்தம் முடிந்தபிறகுதான் மீனுவினிடம் கடவுளுக்குக் கொஞ்சம் கருணை பிறந்தது.

மற்றொரு போர் முனைக்குச் சென்றிருந்த காப்டன் சுந்தரின் அருமை நண்பரான மேஜர் சொக்கப்பா, சுந்தரின் மரணத்தைக் குறித்துத் துக்கப்பிரச்னம் செய்வதற்காக மீனுவின் குடும்பத்தைப் பார்க்கச் சென்றிருந்தார். அவளுடைய அலங்கோல வாழ்க்கை அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது. அதைக் குறித்து மனம் உருகிக் கண்ணீர் வடித்த சொக்கப்பாவின் பெரு முயற்சியால், மீனுவின் குடும்பத்துக்கு சர்க்காரிடமிருந்து ஆறுயிரம் ரூபாய் ஈடுத்தொகை கிடைத்தது. அதைத் தவிர சொக்கப்பாவும் அவரது நண்பர்களுமாகச் சேர்ந்து பெருந் தொகை கொடுத்தனர்.

ஆகையால், இனி மீனுவும் குழந்தைகளும் வறுமைச் சேற்றில் கிடந்து வாடி வதங்க வேண்டியதில்லை. அவளுடைய குடும்பம் கைதூக்கி விடப்பட்டது.

எனினும், மீனுவின் ஹிருதயத்தில் ஏற்பட்ட புண் இந்த ஜன்மத்தில் ஆறுமா?

★

சென்ற மாதம் சென்னைக்கு வந்த 'ரஜூலா' என்ற கப்பலில் என்னுடைய மலாயா நண்பர் ஒருவரும் வந்தார். அவரை வரவேற்பதற்காக நான் துறைமுகத்துக்குச் சென்றிருந்தேன்.

எதிர்பார்த்தபடி என் சிநேகிதர் வந்து சேர்ந்தார். மற்றும் மலாயாவிலிருந்து வந்த நூற்றுக் கணக்கான இந்தியர்கள் கப்பலிலிருந்து இறங்கினர். அவர்களில் மிகவும் ஏழ்மையான நிலையிலுள்ள ஒருவரின் தோற்றம் மாத்திரம் திடீரென்று என் கவனத்தை இழுத்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. உற்றுக் கவனித்தேன்.

அதற்குள் என் நண்பர், "என்ன? அந்தப் பைத்தியத்தைப் பார்க்கிறீர்களா? அதற்கு இந்தியா ஏஜண்டு ஆபீஸ் தர்ம டிக்கெட் கொடுத்து அனுப்பியிருக்கிறது!" என்றார்.

மீண்டும் அருகில் சென்று உற்றுப் பார்த்தேன். மின்சார சக்தி என்மீது பாய்ந்ததுபோன்று ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. என் ஹிருதயம் வெடித்துவிடும்போலிருந்தது.

அவருடைய உரு அடியோடு மாறியிருந்தது. ஆறு வருஷங்களுக்கு முன் அவரை நான் பார்த்தபோது அவருக்குச் சுமார் முப்பத்தைந்து வயது இருக்கும். இன்றோ அவரை ஐம்பது வயதுக்கு மேற்பட்டவரென்றே எவரும் கூறுவர்! தலை நரைத்து வழுக்கையும் விழுந்திருந்தது. உடம்பு கூன் விழுந்து தலை குனிந்தபடியே இருந்தது.

இன்னும் அருகில் சென்றேன். "உங்கள் பெயர் என்ன?" என்றேன். நான் கேட்டது அவருடைய காதில் விழவில்லை போலும். மீண்டும் உரத்த குரலில், "உங்கள் பெயர் என்ன?" என்றேன்.

அவர் நிமிர்ந்து பார்த்தார். கண்கள் ஒளியிழந்திருந்தன. கன்னங்கள் ஒட்டிக் கிடந்தன. ஒரு நிமிஷ நேரம் என்னை வெறிக்கப் பார்த்தார். 'ஸ்ரீதர்'. 'ஸ்ரீதர்' என்றார். பின்னர் ஆகாயத்தைப் பார்த்தபடி, "அதோ! அதோ ஒரு எலி ஓடுகிறது பாருங்கள்" என்றார்.


என் தலை சுழன்றது. என் சந்தேகம் தீர்ந்தது. அவர் சுந்தர்தான்; காப்டன் சுந்தர் அவரே தான்!

சுந்தர் மூழ்கி மாண்டதாக முன்பே சர்க்கார் உறுதி செய்து விட்டனர்! அவர் 'இறந்து' ஆறு வருஷங்களாகி விட்டன!

எனவே, காப்டன் சுந்தர் சாகவில்லை, உயிருடன் இருக்கிறார் என்று நான் இப்போது சொன்னால் யார் நம்பப் போகிறார்கள்? இதை யார் நம்பினாலும் நம்பா விட்டாலும், மீனுவும் மேஜர் சொக்கப்பாவுமாவது நம்புவார்களா?



Policy
WORLD WIDE POLICY
வருஷக்கணக்கில் டிவிடென்டு
(லாபம்) கொடுக்கக் கூடியது.
தங்க முனை
சேமிப்பு
ரூ.15!
மெண்ட்மோர்
ஆடோப்ளோ.
MENTMORE
Auto-Flow
FOUNTAIN PEN



கம்பர் தரும் காட்சி

•••

203. இனி யாரைப் புகழ!

ராமனைப் பார்த்ததும் ராமனுக்காகவே வாலி அனுதாபப்படுகிறான்.

"எப்படியோ என்னத்தையோ எண்ணி அதர்மமான காரியத்தைச் செய்து விட்டாயே! மறைவிலிருந்து வீராயுதபாணியின் மேல் பாணம் விடுதல் உனக்குத் தகுமா?

"உன் தந்தையின் குணந்தான் என்ன, சத்தியத்தைக் காத்தான். உலக தர்மத்தைக் காத்தான். அவைகளுக்காக உயிரையும் விட்டான். உன் தம்பி பரதனும் நீதியை விட்டுச் சற்றும் விலகாத புண்ணிய ஆத்மா அல்லவா? அப்படி இருக்க இவ்வாறு நடந்து கொள்ள எப்படி முடிந்தது உனக்கு?"

வாய்மையும் மரபுங்காத் து
மன்னுயிர் துறந்தவள் ளல்த்
தூயவன் மைந்தனே! நீ
பரதன்முன் தோன்றினா யே!
தீமைதான் பிறரைக்காத் துத்,
தான்செய்தால் தீங்கன்றா மோ!
தாய்மையும் அன்றி நட் பும்
தருமமும் தழுவி நின் றாய்!

[வாய்மையும் மரபும் காத்து: சத்தியத்தையும் குலதர்மத்தையும் காத்து; மன்னுயிர் துறந்த வள்ளல்: தன் அரிய உயிரை விட்ட தசரதன்; தீமைதான் பிறரைக் காத்து: பிறர் தீமை செய்யாமல் பாதுகாத்து; தான் செய்தால் தீங்கன்றோ: நீயே அந்தத் தீமையைச் செய்தால் அது தீமை யாகாது என்று சாஸ்திர முண்டா; தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய்: அடடா, உன் குணந்தான் என்ன. அன்பு, நட்பு, இரக்கம் எல்லாவற்றிற்கும் புகலாக நிற்பவன் அல்லவா நீ? — நீயா இந்த அநீதியைச் செய்ய வேண்டும்?]

நாணம் அனுதாபம் இரண்டும் உண்டாகிறது. பிறகு மெள்ள ஆங்காரம் பிறக்கிறது. அதைக் கவிஞர் எப்படி வெளியிடுகிறார் பார்க்கலாம்:

"க்ஷத்திரியர்களுக்கென்று உயர்ந்த தர்மங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தத் தருமங்கள் உன் குலத்தில் உதித்தவர்களுக்கெல்லாம் உரிமை தானே? உன்னிடத்தில் ராஜ லக்ஷணம் எவ்வளவு அழகாகப் பொருந்தியிருக்கிறது. இதையெல்லாம் யோசிக்கும்போது உன் செயலுக்குக் காரணம் கண்டு பிடிக்க முடியவில்லை."

கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித் தோர்கட் கெல் லாம்
ஓவியத் (து) எழுதஒண் ணா
உருவத்தாய் உடைமை அன் றோ!
ஆவியைச் சனகன் பெற் ற
அன்னத்தை அமிழ்தின் வந் த
தேவியைப் பிரிந்தபின் றைத்
திகைத்தனை போலும் செய் கை!

[கோவியல் தருமம்: அரசர்கள் அனுஷ்டிக்க வேண்டிய நீதி; ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்: பொதுவாக ஒருவர் முகத்திலும் உடல் அமைப்பிலும் அழகின் அம்சங்கள் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும். சாமான்யமாகப் பார்ப்பவர்களுக்கு அவை தென்படாமல் போய் விடலாம். ஆனால் சித்திரக்காரன் என்ன செய்கிறான்: அந்த அம்சங்களை மாத்திரம் எடுத்து அவைகளுக்கு அழுத்தம் கொடுத்து விடுகிறான். இந்தத் தெளித்தல் காரணமாக இயற்கையில் உள்ள அழகைவிட, சித்திரத்தின் அழகு அதிகமாகி

விடுகிறது. ஆனால் ராமனிடத்திலோ எல்லா அம்சங்களும் அழகுடன் நிற்கின்றன. தெளிப்பதற்கு இடமில்லை. சித்திரக்கலை தெளிப்பதனாலேயே குறைபட்டு விடுகிறது. ராமனது இயற்கை யழகு அவ்வளவு பூரணமாக இருக்கிறது என்பது பொருள்; உடைமை அன்றே: கையான வேண்டிய காரியமல்லவா; ஆவியை: உயிருக்குச் சமானமான மனைவி சீதையை; அமிழ்தின் வந்த தேவியை: தேவாமிர்தம் எவ்வளவு அருமையாக வந்தது. அப்படி அருமையாய்க் கிடைத்த சீதையை; நினைத்தனை போலும் செய்கை: உன் சுபாவத்துக்கு ஒவ்வாதபடி தாறுமாறும் நடந்து கொண்டாய்,—வேறு என்ன காரணத்தைச் சொல்ல?]

ராமன் லக்ஷியத்தை விட்டுத் தவறி விட்டானே என்று மேலும் மேலும் வருந்துகிறான் வாலி. அவனுக்கு ராமனிடத்தில் இன்னும் ஒரு இரக்கந்தான்!

அரக்கர் ஒரு அக்கிரமம் செய்து விட்டு ஓடிப்போய் விட்டால் அதற்காகச் சம்பந்த மில்லாதவர்களைக் கொல்லுவது எந்த விதத்தில் பொருத்தம்?

அரக்கர்ஓர் அழிவுசெய் து
கழிவரேல், அதற்குவே றோர்
குரக்கினத்(து) அரசைக்கொல் ல
மனுநெறி கூறிற் றுண் டோ!
இரக்கம்எங்(கு) உகுத்தாய்?என் பால்
எப்பிழை கண்டாய்,அப் பா?
பரக்கழி இதுநீபூண் டால்
புகழையார் பரிக்கற்பா லார்?

[அரக்கர் ஓர் அழிவுசெய்து கழிவரேல்: யாரோ ஒரு அரக்கன் வந்து மனைவியை எடுத்துக் கொண்டு போய் விடுவானானால், குரக்கினத்து அரசை: குரங்குகளுக்கு அரசனை என்னை; பரக்கழி இது நீ பூண்டால்: பெரும்பழியாகிய இதை உத்தம புருஷனான நீ கொண்டு விட்டால்; புகழை யார் பரிக்கற்பாலார்: புகழ்வதற்கு உரியவர் யார் இருக்கப் போகிறார்கள் உலகத்தில்; பரிக்கல்: தாங்குதல்.]

இதுவரையும் வாலியின் உடம்பில் ரத்தமும் வலிமையும் கொஞ்சம் இருந்து கொண்டிருந்தது. அதனால் இயல்பான முறையில் மனசு தொழிற் பட்டது. ராமனிடத்தில் அது காரணமாக மதிப்பும் பரிவுங் கொண்டு பேசினான் வாலி.

காந்தி மகான் திருவாக்கு-3

●

குடிசைத் தொழில் ஏதாவது ஒன்று இல்லாவிட்டால், இந்தியக் குடியானவனுடைய கதி அதோகதி யாகிவிடும். தன்னுடைய நிலத்தில் விளைவதை வைத்துக் கொண்டு அவன் காலந் தள்ள முடியாது. விவசாயத்துக்கு அடுத்தபடியாக அவனுக்கு மற்றொரு தொழிலும் இருக்க வேண்டியது அவசியம். அப்படிப் பார்க்கும்போது, நூல் நூற்பதுதான் எளிது, சிறந்தது, செலவும் குறைந்தது.

இந்த மாபெருங் கலையை மீண்டும் பரப்ப நான் முயற்சி செய்வதைப் பார்த்துச் சில நண்பர்கள் சிரிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆலைகளும் தையல் இயந்திரங்களும் 'டைப் ரைட்டர்' மெஷின்களும் இருக்கும் இந்தக் காலத்தில், துருப் பிடித்துப் போன இராட்டினத்துக்குப் புத்துயிர் கொடுத்துவிடலாம் என்று பைத்தியக்காரன் தான் நினைப்பான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நண்பர்கள் ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள். தையல் இயந்திரம் வந்துவிட்டதால் உலகத்தில் ஊசியே இல்லாமல் போய்விடவில்லை; 'டைப் ரைட்டர்' வந்து விட்டதால், நம்முடைய கை எழுதும் சக்தியை இழந்து விடவில்லை. பெரிய பெரிய ஹோட்டல்கள் இருக்கும்போது ஒவ்வொரு வீட்டிலும் சமையலறையும் இருப்பதைப் போல, பெரிய பெரிய ஆலைக்கு மத்தியில் கைராட்டினமும் ஏன் இருக்க முடியாது? உண்மையாகப் பார்க்கப் போனால், டைப்ரைட்டர்களும் தையல் இயந்திரங்களும் உலகத்தில் இல்லாமற் போகலாம். ஆனால், ஊசியும் சாதாரண நாணல் பேனாவும் எப்போதும் இருக்கும். பஞ்சு ஆலைகள் அழிந்து விடலாம். ஆனால், இராட்டினம் ஒரு நாட்டுக்கு இன்றியமையாத தாகும்.

— யங் இந்தியா 18-8-1920

அவன் சொன்ன யுக்தி



அம்புலு

"பாட்டு வாத்தியார் சொல்லிக் கொடுத்த பாட்டை ஒரு முறை வாசித்துப் பார்ப்போம்" என்று வீணைத் தச் சானா பிடிலை எடுத்து வைத்துக்கொண்டாள். அதில் வில்லைப் போட்டவுடனேயே, "சானா, சானா!" என்று கத்தினான் மூர்த்திகிருஷ்ணன். அவன் கத்தியது காதில் விழாதது போல் சானா மேலே பிடிலை வாசித்தாள். அடுத்த நிமிஷம் மாடியே இடிந்து விழுந்து விடும்போல் தடதட வென்று நடந்து கீழே இறங்கி வந்தான் மூர்த்திகிருஷ்ணன். "ஏ, சானா! நான் சொன்னது உன் காதில் விழவில்லையா? நிறுத்து, உன் பாட்டை! எனக்கு முக்கியமான பாடம் இருக்கிறது; படிக்க வேண்டும்!" என்றான்.

சானா, மூர்த்திகிருஷ்ணனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல், "அம்மா, அம்மா! இங்கே வந்து பாரு!" என்று தன் தாயாரைக் கூப்பிட்டாள். உள்ளேயிருந்து ராஜம் வந்தாள். மூர்த்திகிருஷ்ணன் ராஜத்தைப் பார்த்து, "அக்கா! தயவு செய்து உன் பெண்ணைப் பாடவேண்டா மென்று சொல்லு!" என்றான்.

அதற்கு ராஜம், "பாடாவிட்டால் பாட்டு எப்படியடா வரும்? அவள் பாடினால் உனக்கு என் கஷ்டமாக இருக்கிறது?" என்றாள்.

"எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. நான் வீட்டில் இருக்கிற வரையில் அவளை பாட வேண்டாமென்று உன் பெண்ணுக்குச் சொல்லி வை!" என்று சொல்லிவிட்டு, ராஜத்தின் பதிலைக்கூட எதிர்பாராமல் தடதடவென்று மாடிப்படி ஏறினான் மூர்த்திகிருஷ்ணன்.

"உன்னைச் சொல்லுவதில் குற்றமில்லை. எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!" என்று முனகிக் கொண்டே ராஜம் தன் கணவரிடம் வந்து, "என்ன, இவனை இப்படியே விட்டுவிட்டீர்களே? கொஞ்சம் கண்டிக்கக் கூடாதா?" என்றாள்.

காப்பி சாப்பிட்டுவிட்டுக் காலைப் பத்திரிகையைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்த ராமசாமையர், ராஜத்தின் குரலைக் கேட்டுத் தலையை உயர்த்திப் பார்த்தார். பிறகு, "என்ன சங்கதி?" என்று கேட்டு விட்டு மீண்டும் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தார்.

"சங்கதி என்னவென்று ஒன்றுந் தெரியாததுபோல் கேட்கிறீர்களே! பொழுது விடிந்தால் பொழுது போனால் இவனுடைய அதிகாரம் பெரிதாக இருக்கிறதே! இவனல்லவா இப்பொழுது வீட்டுக்கு எஜமானனாக இருக்கிறான்? சானாவைக் கண்ணிலேயே காணக் கூடாது, அவள் குரலைக் காதாலேயே கேட்கக் கூடாது என்றால் என்ன அர்த்தம்?" என்று அடுக்கிக் கொண்டே போனாள் ராஜம்.

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று கேட்டார் ராமசாமையர்.

"'இப்படி யெல்லாம் யாரை அதிகாரம் பண்ணுகிறாய்?' என்று நீங்கள் சற்றுக் கேட்டு வைத்தால் என்ன? உங்களுக்குப் பயப்பட மாட்டானா?"

"இதோ பார், இப்போது நீ என்னைக் கோபித்து என்ன பிரயோஜனம்? நீதான் அவனை பீ. ஏ., வரை படிக்க வைக்க வேண்டும், படிக்க வைக்க வேண்டும் என்றாய்; படிக்க வைத்தேன். பிறகு 'தம்பிக்குப் பெண்ணைக் கொடுக்கப் போகிறேன்; அதனால் அவனை டாக்டருக்குப் படிக்க வைக்கவேண்டும்' என்றாய். 'சரி,



சரளாவுக்கும் ஒரு வரனைத் தேடினால் இரண்டாயிரம் மூவாயிரம் ஆகுமே, அதை இவனுக்கே செலவழித்து விட்டால் போகிறது' என்று அவனை மெடிகல் காலேஜில் சேர்த்தேன். அதன் பலன் விபரீதமாக இருக்கிறது. இப்பொழுது தம்பியைக் கண்டித்து நல்லவனுக்கும்படி சொல்லுகிறாய்! நான் யாரைக் கண்டிப்பது!" என்றார்.

ராஜம் பதில் எதுவும் சொல்லாமல் உள்ளே போய்விட்டாள்.

★

அன்று பகல் மூன்று மணி இருக்கும். வீட்டில் சரளாவையும் ராஜத்தையும் தவிர வேறு யாருமில்லை. அப்பொழுது யாரோ வந்து வாசற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு ராஜம் கதவைத் திறந்தாள். அங்கே ஒரு பெண்—பார்த்தால் வைத்தியக் கல்லூரி மாணவி போலத் தோன்றும் ஒருத்தி—நின்றுகொண்டிருந்தாள். அவள், "முத்துகிருஷ்ணன் வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டாள். அதற்கு ராஜம், "அவன் எங்கேயோ வெளியில் போயிருக்கிறான், கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவான். நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

அந்தப் பெண், "என் பெயர் நிதா. முத்துகிருஷ்ணன் என் 'கிளாஸ் மேட்.' அவரிடம் நான் சில புத்தகங்கள் கேட்டிருந்தேன். அதை வாங்கிக்கொண்டு போகலாமென்று வந்தேன். பரவாயில்லை, அவர் வந்தால் நான் இங்கு வந்துவிட்டுப் போனேன் என்று மாத்திரம் சொல்லி விடுங்கள்!" என்றாள்.

"அவசியம் சொல்லுகிறேன்" என்றாள் ராஜம்.

அந்த நிமிஷத்திற்கெல்லாம் வெளியி லிருந்து வந்த முத்துகிருஷ்ணன், "அக்கா, என்னைத் தேடிக்கொண்டு இங்கே யாராவது வந்தார்களா?" என்று கேட்டான்.

"ஆமாம், யாரோ ஒரு மாணவி உன்னைத் தேடிக்கொண்டு சற்று முன் இங்கே வந்திருந்தாள்!"

"அவளை நான் இப்போது வழியில் பார்த்தேன். உன்னிடம் என்ன சொன்னாள்?"

"உன்னிடம் ஏதோ புத்தகங்கள் கேட்டிருந்தாளாம். அதற்காக வந்தாள். அவள் யார்? அவளுக்கு அம்மா, அப்பா எல்லாரும் இருக்கிறார்களா?" என்று ஆவலுடன் கேட்டாள் ராஜம்.

"நம்மைப்போலத்தான் அவளுக்கும் அம்மா, அப்பா கிடையாது. ஒரு மாமா மட்டும் சேலத்தில் ஜட்ஜாக இருக்கிறார்."

"கல்யாணமாகி விட்டதா?"

"என்ன கேள்வி அக்கா, இது! கல்யாணமானால் இங்கே மெடிகல் காலேஜில் வந்து ஏன் அவஸ்தைப்படுகிறாள்?"

"சரி; உனக்கு அவளைக் கல்யாணம் செய்துகொள்ளும் பாக்கியம் கிடைக்குமா?"

"அதுவேயில்லை; அவள் என்ன சாமானியமானவளா? அவளுக்கு ஏராளமாகப் பணம் இருக்கிறது. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள்; படித்தவள்."

ராஜம் இதை நம்பவில்லை. "அப்படியா!" என்று மாத்திரம் சொல்லிவிட்டு உள்ளே போனாள். அவளுடைய மனசு தவியாய்த் தவித்தது. யாரோ ஒரு மாணவியுடன் முத்துகிருஷ்ணனை அடிக்கடி பார்ப்பதாக 'அவர்' சொன்னது பொய்யல்ல; அந்த மாணவி இவளாகத்தா னிருக்க வேண்டும்! முத்துகிருஷ்ணன் எவ்வளவு பொருத்தமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்! படித்தவன் படித்தவளை விரும்புகிறான். இது இயற்கைதானே? அவன்மீது என்ன தப்பு இருக்கிறது? சரளாவை வெறுமனே வீட்டு வேலை செய்யவும் குழந்தை தூக்கவும் வைத்து அவளுடைய அறிவைக் கெடுத்து விட்டு இப்போது வருத்தப்பட்டால் என்ன பிரயோஜனம்?

இப்படி யெல்லாம் என்னவெல்லாமோ எண்ணி எண்ணி மனம் புழுங்கிக்கொண்

டிருந்த ராஜம், அன்றிரவு தன் கணவரிடம் மத்தியானம் நடந்ததையெல்லாம் சொல்லி, "இவன் எங்கே சரளாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறான்? அப்படியே பண்ணிக் கொண்டாலும் அவளுக்கு ஒன்றும் சுகமிருக்காது. பேசாமல் சரளாவுக்கு வேறு வரன் பார்க்க வேண்டியது தான்!" என்றாள்.

ராமநாதையருக்குத் 'திக்'கென்றது. "கிட்டத்தட்டப் பத்தாயிரம் ரூபாய் வரையில் முத்துகிருஷ்ணனுக்குச் செலவழித்து விட்டு, இப்போது வேறு வரன் தேடுகிறதாவது! விளையாட்டாக இருக்கிறதே!" என்று எண்ணிக் கவலைப் பட்டார்.

இந்தக் கவலையில் அன்று இரவு முழுவதும் அவருக்குத் தூக்கமே வரவில்லை.

★

சில தினங்களுக்குப் பிறகு ஒருநாள் முன்பின் தெரியாத சிலர் ராமநாதையர் வீட்டுக்கு வந்தார்கள். முதலில் அவர்கள் யார் என்று தெரியாமல் முத்துகிருஷ்ணன் விழித்தான். பிறகு நடந்த காரியங்களைக் கொண்டு அவர்கள் பெண் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டான்.

சரளாவுக்கு மாப்பிள்ளையாக வரப் போகும் வரன் ஸ்கூல் பைனல் பாஸ் பண்ணிவிட்டு எங்கேயோ குமாஸ்தாவாக இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். அவனைப் பார்த்தால் முத்துகிருஷ்ணனுக்குப் பரிதாபமாக இருந்தது. பிள்ளையின் பெற்றோரும் உறவினரும்கூட ரொம்ப நல்லவர்களாகவும், ஆனால் ஏழையாகவும் காணப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் போன பிறகு முத்துகிருஷ்ணன் ராஜத்தைப் பார்த்து, "அக்கா, இந்த அபூர்வ மனிதர்களை எங்கே பிடித்தாய்? இவர்களெல்லாம் யார்?" என்று கேட்டான்

"எங்கேயோ பிடித்தேன்; என்ன செய்கிறது? படித்து நாகரிகமாக இருப்பவர்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படியாக நான் என் பெண்ணை வளர்க்கவில்லையே! என்ன செய்யட்டும்?" என்றாள் ராஜம்.

இந்த வார்த்தை முத்துகிருஷ்ணனுக்குச் 'சுருக்'கென்று தைத்தது. அவன் ராஜத்தின் முகத்தை நிமிர்ந்து பார்த்து விட்டு அப்பால் போய்விட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் 'டிரஸ்' பண்ணிக் கொண்டு, 'இனிமேல் இந்த வீட்டில் காலை வைக்கக் கூடாது' என்ற தீர்மானத்துடன் மெடிகல் காலேஜை நோக்கிப் புறப்பட்டான்.

அங்கே, அவன் ஆஸ்பத்திரிக்குள் நுழையும்போதே சீதா எதிரில் வந்தாள். இருவர் முகத்திலும் புன்னகை பூத்தது.

"எனக்கு இன்றைக்கு ஒரு ஆபரேஷன் இருக்கிறது!" என்று கூறிக் கையைப் பிசைந்தாள் சீதா.

"என்ன ஆபரேஷன்? அந்த 'அப்பெண்டிஸைடி'ஸா?" என்று கேட்டான் முத்துகிருஷ்ணன்.

"ஆமாம்."

"அது ஒன்றும் பிரமாதமில்லை! நீ போகும்போது கூப்பிடு; நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மேலே நடந்தான் முத்துகிருஷ்ணன்.

முத்துகிருஷ்ணன் ஆபரேஷன் செய்வதிலே ரொம்பக் கெட்டிக்காரன் என்று பேர் வாங்கியிருந்தான். எந்தவித ஆபரேஷனையும் அவன் ரொம்ப சுலபமாகச் செய்து விடுவான். ஆகையால், சீதா எப்போதும் அவனுடைய உதவியை நாடுவது வழக்கம்.

★

மாலை ஆறு மணியாயிற்று. பகல் போய் இரவு வந்ததுபோல் முத்துகிருஷ்ணனின் மனதிலும் வைராக்கியம் போய் சீதான புத்தி வந்தது. அவன் என்னென்னவோ யோசித்துப் பார்த்தான். கடைசியில் அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல எழுந்து வீட்டை நோக்கி நடந்தான்.


மாடியிலிருந்த தன் அறைக்குப் போய் விளக்கைப் போட்டு உடைகளை மாற்றிக் கொண்டு, அங்கொன்றும் இங்கொன்று மாகக் கிடந்த புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு மேஜையருகில் உட்கார்ந்து கொண்டான். பிறகு ஏதோ நினைத்தவனாய், "சரளா, சரளா!" என்று இரண்டு தடவை கூப்பிட்டான்.

சரளா வந்தாள். "அம்மா என்ன செய்து கொண்டிருக்கிறாள்?" என்று கேட்டான் முத்துகிருஷ்ணன்.

"தெரியாது!" என்றாள் சரளா.

"தெரியாதா! நீ வீட்டில்தானே இருக்கிறாய்?" என்று கேட்டான் முத்து கிருஷ்ணன்.

"நான் எங்கிருந்தால் உனக்கென்ன? எதற்குக் கூப்பிட்டாய் என்பதைச் சொல்லு, முதலில்!" என்றாள் சரளா.



"அம்மா என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று கேட்பதற்காகத்தான் கூப்பிட்டேன், வேறு ஒன்றுமில்லை!"

"அதை நீயே பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடாதோ? நான் வரணுமாக்கும்!" என்று கூறிக் கோபம் ஜொலிக்கச் 'சரே'லென்று கீழே இறங்கிப் போய்விட்டாள் சரளா.

முத்துகிருஷ்ணனும் அவளைத் தொடர்ந்து கீழே வந்தான்.

அப்பொழுது ராஜம் கைக் குழந்தைக்குப் பால் புகட்டிக்கொண்டிருந்தாள். முத்துகிருஷ்ணன் அவளுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, "அக்கா, நான் சொன்னால் உனக்குக் கோபம் வரும். உன் பெண் ரொம்பக் கெட்டுப் போய்விட்டாள்!" என்றான்.

ராஜம், "ஏன், என்ன செய்தாள்?" என்று கேட்டாள்.

"நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டால் இவ்வளவு நாழிகை என்னுடன் அவள் வாயாடி விட்டு வந்தாள். நீயே வேண்டுமானால் அவளைக் கேட்டுப் பார்!" என்றான் முத்துகிருஷ்ணன்.

"அதற்கு நான் என்ன செய்கிறது?" என்றாள் ராஜம்.

"எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. நீ அதைக் கேட்பாயோ, என்னவோ?"

"என்ன? சொல்லு!" என்று அவநம்பிக்கையுடன் கேட்டாள் ராஜம்.


"அவளுடைய வாயாடித் தனத்தைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. பேசாமல் நீ அவளை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிடு!"

ராஜத்துக்கு இதை நம்பவே முடியவில்லை. அவள் வியப்புடன் முத்துகிருஷ்ணனைப் பார்த்தாள்.

"அக்கா, உன்னுடைய மகளைத் தவிர வேறு யாரையாவது நான் கல்யாணம் செய்து கொள்வேனா? என்ன பைத்தியக்காரத்தனம்! இத்தனை வருஷ காலம் நீ கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்த பிறகு உனக்கு நான் வஞ்சகம் செய்வேனா?" என்றான் முத்துகிருஷ்ணன்.

சந்தோஷ மிகுதியினால் ராஜத்தின் கண்களில் நீர் ததும்பிற்று.

ரேகையும் ரங்கசாமியும்



கிட்டு

"மேகத்திற்கோர் ரேகை உண்டு
மின்னல் என்பார் அதன் பேர்
லோகத்திற்கோர் ரேகை உண்டு
பூமத்ய ரேகை என்பார்
சோகத்திற்கும் ரேகை உண்டு
சொரிந்திடும் கண்ணீர் என்பார்
லோகத்தில் வாழ்வோருக்கும்
ஓடுமே ரேகை கையில்!"

என்று தனக்குள்ளாகவே பாடி முடித்த ரங்கசாமி, பின்னால் திண்ணையில் யாரோ பெருமூச்சுவிடும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். மேகலிங்கம் உட்கார்ந்து, கைத் துண்டால் முகத்தை விசிறிக் கொண்டு, ஆச்வாசப்படுத்திக் கொண்டிருந்தான்.

"என்ன தம்பி, மேகலிங்கம்! எந்தப் பந்தயத்திலே ஓடிப்புட்டு வர்றே?"

"பந்தயம்னுதான் வச்சுக்கிடணும். அவங்க இங்கே வர்றதுக்கு முந்தி நானு வந்துடணும்னுல்லே இப்படி ஓடியாரேன்!"

"எவுங்க இங்கே வரப்போறாங்க?"

"அதாம்பா, நம்ப சின்னப்பாலம் சொக்கலிங்கமில்லே? .... அடேடே! இதென்னப்பா, கையிலே புஸ்தகம்?"

"இதுதாம்பா, ரேகை சாஸ்திரம்னு சொல்லுவாங்க! சும்மா பொரட்டிப் பார்த்துக்கிட்டு இருக்கேன். அது சரி, சொக்கலிங்கம் எங்கிட்டே சோசியம் கேட்க வாராரு, என்ன?"

"இல்லே, ரங்கண்ணே! சின்னப்பாலம் சொக்கலிங்கம் வூட்லே மலையபெருமானுன்னு யாரோ ஒரு ஆளு வந்திருக்குது. அந்த ஆளு கை ரேகை பார்த்துச் சோசியம் சொல்லுதாம். சுத்தப் பொரவிக்கறேன். ஒண்ணுமே தெரியலே!"

"அப்படின்னு இப்போ அவங்க வந்தா நான் என்ன செய்யறது? என் கையைக் காட்டணுமா? இல்லே, கழுத்தையும் கூடக் காட்டணுமா?" என்று வயிற்றெரிச்சலோடு ரங்கசாமி கேட்டான்.

"கோவிச்சுக்கிடாதே, ரங்கண்ணே! ஆசாமிக்கு நல்ல பாடம் கத்துவைக்கணும்னுல்லே, அவுகளை ஒங்கிட்டே கூட்டிவுட்டிருக்கேன்? நானும் கூடவே இருப்பேனில்லே? நீ ஒண்ணும் அலுத்துக்கிடாதே, அண்ணே!" என்று மேகலிங்கம் கூறினான்.

அதற்குள் அவர்கள் இருவரும் ரங்கசாமியின் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டார்கள். மலையபெருமான் திண்ணைமேல் உட்கார்ந்தார். அவருடன் வந்த சொக்கலிங்கம் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"மலையபெருமானுக்கு எந்த ஊரு? எதானுச்சும் உத்தியோகமா? இல்லே, செல பொவன் பார்த்துக்கிட்டு........." என்று ரங்கசாமி கேட்டு முடிப்பதற்குள், மலையபெருமான் பதில் கூற ஆரம்பித்துவிட்டார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க; இப்படி ஊரூராச் சுத்தி வந்து நல்லத்தை, பொல்லாத்தை......" என்று மலையபெருமான் சொல்லிக் கொண்டே போகும்போது, மேகலிங்கம் மெதுவாக, "இருக்கிறத்தை, இல்லாததை......" என்று குறுக்கே சொல்ல, "இதுங்களையெல்லாம் கை ரேகை பார்த்துச் சொல்றது!" என்று மலையபெருமான் கூறி முடித்தார்.

"என்ன, ரங்கண்ணே! ஆளு லேசுப்பட்டவரு என்கிற நெனைப்பு வாணாம். ஆசாமியோட ரேகையைப் பார்த்தே ஆளைக் கணக்குப்பண்ணிப் போடுவாரு. அவரு சொன்னா சொன்னதுதான்!" என்றான் சொக்கலிங்கம்.

"வேணும்னு எதுனுக்கும் கேளேன், மேகலிங்கம்!" என்றான் ரங்கசாமி.

உடனே மேகலிங்கம், மலையபெருமாளிடம் தன் புறங்கையை நீட்டினான். இதைக் கண்டதும் மூன்று பேரும் சிரித்தார்கள்.

"டேய் மேகலிங்கம், உள்ளங்கையைக் காட்டுன்னு பொறங்கையை நீட்டறியே! பொறங் கையிலேயா ரேகை இருக்குது?"

அதற்குள் மலையபெருமாள், "இல்லீங்க, அவரு சும்மா தமாஷ் செய்யறாரு! அவருக்கா தெரியாது?" என்றார்.

"அப்படின்னு, நானு செய்யறது தமாஷ்'ங்கிறதைப் பொறங்கையிலே இருக் கிற ரேகை சொல்லுச்சா?" என்று மேகலிங்கம் கேட்டான்.

"விளையாடாதேப்பா! உள்ளங்கையைக் காட்டு!" என்று ரங்கசாமி சிறிது உரக்கக் கூறினான். உடனே மேகலிங்கம் கையைத் திருப்பினான்.

"நல்ல சேர்த்தியான கைங்க இது; பலமான கை!" என்று ஆரம்பித்தார் மலையபெருமாள்.

"அதை எங்க ஆயாலே சொல்லுவாங் களே, 'உலக்கை மாதிரி கையை வச்சுக் கிட்டு, ஒரு கோடாலி தூக்கி வெட்ட வக்கில்லே'ன்னு!" என்று மேகலிங்கம் 'ததான்து' பாடினான்.

பெருமாளய்யா மறுபடியும் ரேகைகளைக் கூர்ந்து கவனித்தார். திடீரென்று, கால் கண்டு விரலில் தேள் கொட்டியதுபோல் ஒரு துள்ளுத் துள்ளினார்.

"ஐயா! கைங்க, கையி...!" என்று மேகலிங்கம் அலற, "என்ன, என்ன!" என்று ரங்கசாமி கூவ, ஒரு நிமிஷம் ஒரே குழப்பம்!

மலையபெருமாளோ மறுபடியும் நேரே உட்கார்ந்து, "ஒன்றுமில்லீங்க, இந்தக் கையிலே சக்கரமேடு கனருஷியா அமைஞ்சு போயிருக்குது. சூரிய மேட்டோடே போட்டியல்ல போடுது!" என்றார்.

"எத்தைச் சொல்றீங்க! அந்த ஆள் காட்டி விரலு இருக்குதே, அதுக்குக் கீழே பொடைச்சாப்போலே யிருக்குதே, அத்தையா சக்கரமேடுன்னீங்க?" என்றான் மேகலிங்கம்.

"பலே, சபாஷ்! கண்டு பிடிச்சட்டீங் களே!" என்றார் மலையபெருமாள்.

"கண்டு புடிக்கிறதா? மூணு நாளு ராவாப் பவலாப் பட்டபாடு, அதுக்குள்ளாற மறந்து பூடுமா?" என்றான் மேகலிங்கம்.

"பட்ட பாடா!" என்று மூன்றுபேரும் ஏககாலத்தில் கூவினார்கள்.

"ஆமாங்கறேன்! நேத்து வூட்லே, எங்க ஐயா படத்தைச் சொவத்துலே மாட்டிப் போட்டு, கீழே வந்து படம் நல்லா மாட்டி யிருக்குதான்னு பார்த்தேன். பானாப் போன படம் திமர்னு கீழே விழுந்துச்சு. உடையப் போவுதேன்னு கையாலே தாங்



யைப் பிடிக்கப்போனேன். அது வேறு யிலே மோதி வீங்கிப் போயிடுச்சு. அந்த வீக்கத்துக்குச் சக்ரமேடுன்னு ஒரு பேரையும் குடுத்துடப்போட்டாரு பெருமாளய்யா!" என்றான் மேகலிங்கம்.

மலைபெருமாள், பாவம்! என்ன சொல்வது என்று தெரியாமல் 'இருந்தாலும்ங்க தேன்......" என்று ஏதோ இழுத்தார்.

அதற்குள் ரங்கசாமி குறுக்கிட்டு, "ஏ மேகலிங்கம்! ஏது, அவரைக் கொஞ்ச நேரத்திலே பைத்தியமாக்கிப்புடுவே போலே யிருக்கே? அவரு சமாளிச்சுக்கிறதுக்குக் கொஞ்சம் அவகாசம் குடு, தம்பி!" என்று பரிவுடன் கூறினான்.

அதற்குள் மலைபெருமாள், "பரவாயில்லீங்க; மேகலிங்கம் கை வீங்கின வேலையைப் பாருங்க! அது என் கண்ணுக்குப் பட்டு, காலு பலன் சொல்லணும்னு இருக்குச்சே!" என்று ஏதோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் கூறிச் சமாளித்துக் கொண்டு, மேலும் கையைப் பார்க்கலானார்.

"ஐயா, மேகலிங்கம் கோணத்தைப் பத்தி எதுனாச்சும் புரியுதா, தெரியுதா? சொல்லுங்க!" என்று கேட்டான் ரங்கசாமி.

அதற்குள் மேகலிங்கம் ரொம்பக் கருத்துள்ளவன்போல், "கோணம் கெடக்குதுங்க, பண நிலைமை சொல்லுங்க!" என்றான்.

"பணத்துக்கு என்னப்பா! மேல் ரேகையும் மத்ய ரேகையும் ரொம்ப சுத்தமா சந்திக்கிதுங்க. அதனாலே, சூரிய புத்தி போவுது. சுக்ரபுத்தி போவுது. ராகுபுத்தியும் போய், கேது புத்திடம் போய்......" என்று பெருமாளய்யா சொல்லிக் கொண்டே போகும்போது மேகலிங்கம் குறுக்கிட்டு, "சயபுத்தியும் போயி......" என்று கூறினான். சொக்கலிங்கத்துக்குக் கோபம், 'மேகலிங்கம்......!' என்ற ஹூங்கார சத்தத்துடன் வெளிவந்தது.

இந்தச் சமயத்தில் "அடேடே, இதை நான் பார்க்கலீங்களே!" என்று பெருமாளய்யா, இரண்டாவது தடவையாகத் துள்ளினார்.

"எதுக்க?" என்று கேட்டுக் கொண்டே குனிந்து பார்த்தான் ரங்கசாமி.

"ஐயா, எப்படி அளுத்தமா வளந்து போயிருக்குது! உடனே நீங்க பொதுப்பட்டுப் போய் ஒரு பெரிய கடை வைக்கலாம். நல்ல லாபம் கெடைக்கும்" என்றார் மலைபெருமாள்.

"நீங்க சொல்றது புரியலீங்களே?" என்றான் ரங்கசாமி.

"பாருங்க, இந்த ரேகை எவ்வளவு அளுத்தமா வளர்ந்திருக்குது? இதுக்கு அதிர்ஷ்ட ரேகைன்னு பேரு!" என்றார் மலைபெருமாள்.

"இல்லீங்க, இதுக்குப் பேரு இளநீரு ரேகை! மூர்த்தா நாளு இளநீர் வெட்டினப்போ, கையிலேயும் வெட்டிக்கிட்டேன். அந்தக் காயம்தான் இது!" என்றான் மேகலிங்கம்.

இதைக் கேட்ட மலைபெருமாளின் முகத்தில் ஈ ஆடாதது பெரிதல்ல; சொக்கலிங்கத்தின் முகத்திலும் ஈ ஆடவில்லை.

"என்ன மேகலிங்கம்! மலைபெருமாளை காலை வாரி விடறியே?" என்றான் ரங்கசாமி.

ஆனால் மலைபெருமாளோ, சளைக்கவில்லை. "காலை வாரி வுடறதென்னங்க! எனக்குக் கண்ணு சாளேசுரம். அதான் சரியாத் தெரியலே; தம்பி ரொம்பத் தமாசுங்க!" என்று மேகலிங்கத்துக்கு 'ஸர்டிபிகேட்' கொடுத்தார்.

"அது சரிங்க, மேகலிங்கத்துக்கு வேறே எதுனாச்சும் உண்டா?" என்று கேட்டான் சொக்கலிங்கம்.

இந்தக் கேள்வி மலைபெருமாளுக்கு இழந்த உற்சாகத்தை மீண்டும் திருப்பித் தந்தது.


"அதுலே, ஆள்காட்டி விரல் ஆயுக ரேகையைப் பார்க்குது; மோதிர விரலு, கேது மேட்டைப் பார்க்குது; உள்ளங்கை மொவத்தைப் பார்க்குது!" என்றார் மலைபெருமாள்.

"நீங்க என் கையைப் பார்க்கிறீங்க; சொக்கலிங்கம் என் மொவத்தைப் பார்க்குது; ரங்கசாமி அண்ணன் கடிகாரத்தைப் பார்க்குது..............!" என்று சொல்லிக் கொண்டே வந்தான் மேகலிங்கம்.


சொக்கலிங்கம் மேல் துண்டை உதறிக் கொண்டு எழுந்து, "மலைபெருமாள், போவலாம் வாங்க!" என்றான்.

அவர்கள் இருவரும் தங்கள் பார்வையிலிருந்து மறையும் வரை, ரங்கசாமியும் மேகலிங்கமும் அவர்களையே பார்த்துத் திறந்த வண்ணம் நின்று கொண்டிருந்தனர்.


மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல-
இது
நல்லது !
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
முக்கியமாக குழந்தைகளுக்கு
போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விட்டமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்கமளித்து ஜீவசக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விட்டமின்கள் நிறைந்தது.
காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி
சப்ளை கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
காட்பரி-ப்ரை(எக்ஸ்போர்ட்) லிட், (Dept 22) தபால் பெட்டி 1417-பம்பாய்.



A.V.S.
டாபியோகா மாவு
ERODE
A.V.S.
TAPIOCA
A. V. சுப்ரமண்யம்
(Tel: INSAF)
ஈரோடு.
(S. INDIA)



வாழ்க்கையில்
புதிய ஒளி
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

புது யுகம்

“கல்கி” பத்திரிகையின் முதல் இதழ் 1941-ம் வருஷம் ஆகஸ்டு மீ 1உ வெளி வந்தது. அந்த முதல் இதழில் வெளியான தலையங்கத்தின் முக்கிய பகுதிகளைக் கீழே வெளியிடுகிறோம் :—

“பகவான் என்னத்திற்காக இன்னும் மனிதர்களைப் படைத்துக் கொண்டிருக்கிறார்?”

நமது தேசிய மகா கவியான டாக்டர் ரவீந்திரநாத டாகூர் மேற்படி கேள்வியைக் கேட்டு விட்டு அதற்குப் பதிலும் தாமே கொடுத்திருக்கிறார்:—

“மனிதனைச் சீர்திருத்தி விடலாம் என்ற நம்பிக்கை பகவானுக்கு இன்னமும் இருந்து வருவதனால்தான்!”

பகவானுக்கு அத்தகைய நம்பிக்கை இருக்கலாம்! டாகூரைப் போன்ற இலட்சிய உலகில் வாழும் மகான்களுக்கும் இருக்கலாம். ஆனால் சாதாரண மனிதர்களாகிய நமக்கு அந்த நம்பிக்கை அவ்வளவு பலமாக இல்லையென்றே சொல்ல வேண்டும். “மனிதனையா? பகவான் சீர்திருத்திவிடப் போகிறாரா? இத்தனை நாளும் அவருடைய முயற்சிகள் எள்ளைப் ஒன்றும் பலித்ததாகக் காணோமே? இனிமேல் மட்டும் என்னத்தைப் பலித்துவிடப் போகிறது?” என்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

முக்கியமாக, தற்சமயம் ஐரோப்பாவில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது பகவானுடைய சக்தியில் நம்முடைய நம்பிக்கை அடியோடு போய் விடப் பார்க்கிறது.

உலகத்திலே மகா புத்திசாலிகள், மிகத் திறமைசாலிகள், மேதைகள் என்று பெயர் பெற்றவர்கள் ஜெர்மன் ஜாதியார். எத்தனை எத்தனையோ விஞ்ஞான ஆராய்ச்சிகள் செய்தவர்கள்; புதிய புதிய இயந்திர சாதனங்களைக் கண்டு பிடித்தவர்கள், எத்தனையோ உயர்ந்த மருந்துகளையும், வாழ்க்கை வசதிகளையும் உலகத்துக்கு அளித்தவர்கள்; அப்படிப்பட்ட ஜெர்மானியர் அக்கிரமமாகப் படையெடுத்துப் பக்கத்திலுள்ள ருஷ்யா நாட்டில் புகுந்திருக்கிறார்கள். போகும்போதே நெருப்பைக் கக்கிக் கொண்டு போகிறார்கள்; போகுமிடமெல்லாம் ஸ்மசான பூமியாக்கிக் கொண்டு போகிறார்கள்.

ருஷ்யர்கள் என்ன செய்கிறார்கள்? பதிலுக்குப் பதில் அவர்களும் நெருப்பைக் கக்குகிறார்கள்; தீ மழை பொழிகிறார்கள். அப்படியும் ஜெர்மானியரைத் தடுத்து நிற்க முடியவில்லையென்றால், தங்களுடைய வீடுகளைத் தாங்களே கொளுத்துகிறார்கள்; வயல்கள், உணவுப் பொருள்கள், உற்பத்திச் சாலைகள் — எல்லாவற்றையும் தாங்களே நிர்மூலம் செய்கிறார்கள். இப்படித் தங்கள் நாட்டைத் தாங்களே பாலைவனமாக்கிவிட்டுப் பின்வாங்குகிறார்கள்.

இரண்டு புறத்திலும் லட்சக் கணக்கான மக்கள் சாகிறார்கள்; சாகாமல் தப்பிப் பிழைக்கும் ஜனங்கள் பயங்கரமான பஞ்சத்தை எதிர்நோக்கி வாழ்கிறார்கள். எத்தனையோ வருஷமாக உழைத்துப் பாடுபட்டுச் சேர்த்த பண்டங்கள் எல்லாம் பாழாகின்றன; அளவில்லாத பொருள் நஷ்டம் ஏற்படுகிறது; வீடு இருந்த இடம் காடாகிறது!

இவையெல்லாம் மனிதர்கள் செய்யக்கூடிய காரியங்களாகத் தோன்றுகிறதா? ஓநாய்களையும் சிறுத்தைகளையும்விடக் கேவலமான ஜந்துக்களைப் போலல்லவா மனிதர்கள் காரியம் செய்கிறார்கள்?

இப்படிப்பட்ட மனிதர்களையா பகவான் சீர்திருத்திவிடப் போகிறார்?

இவ்வாறு நாம் நிராசையடையும் சமயத்தில்தான், மகாத்மா காந்தியின் அறிக்கையொன்றைப் படிக்கிறோம். உடனே, நமது நிராசை பறந்துவிடுகிறது. “ஆகா! இப்படிப்பட்ட ஒரு மனிதர் உலகிலே இருக்கும்போது மனிதனைப்பற்றி பகவான் ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும்?” என்று கருதுகிறோம்.

உலகத்தை இன்று சூழ்ந்திருக்கும் பயங்கரமான இருளுக்கு மத்தியில், காந்தி மகான் தாம் ஏந்தும் அஹிம்ஸா தீபத்தை அணையாமல் காப்பாற்றிக் கொண்டு வருகிறார். கொடூரமான

கொலைகளுக்கும் இரத்த வெள்ளத்துக்கு மிடையே, "அன்பு" உபதேசம் செய்து கொண்டிருக்கிறார். சுயநலப் பேய் தாண்டவமாடும் உலகத்தில், மக்கட் குலத்தின் நலத்துக்காகச் சுய நலத்தைத் தியாகம் செய்யும் மகா தர்மத்தைப் போதிக்கிறார்.

"இருபதாம் நூற்றாண்டில் உலக மானது ஜட நாகரிகத்தின் உச்ச நிலையை யடைந்திருந்தது; மனிதர்கள் தங்கள் மூளையின் சக்தி அனைத்தையும் தேக வலிமை அனைத்தையும் ஒருவரை யொருவர் அழித்துக் கொல்வதில் ஈடுபடுத்தி யிருந்தார்கள். இப்படிக் கொலை வெறியில் மூழ்கி யிருந்த உலகத்தில், தீர்க்க தரிசனத்துடன் உலகத்தின் நன்மை ஒன்றையே கருதிய மகான் ஒருவர் இருந்தார். வெடி குண்டுகளின் பயங்கர சப்தங்களுக் கிடையே 'அன்பு' 'அஹிம்ஸை' என்று போதித்துக் கொண்டிருந்தார். அழிவுக்கும் நாசத்துக்கும் மத்தியில் அவர் புது யுகத்துக்கு அஸ்திவாரம் போட்டுக் கொண்டிருந்தார்!" என்று உலக சரித்திரத்தில் எழுதப்படுமானால் அதைவிட இந்திய நாட்டுக்கு ஏற்படக் கூடிய நன்மை வேறென்ன இருக்க முடியும்?

பிரளய காலத்தைப் பற்றி நமது புராணங்களில் வர்ணனைகள் படித்திருக்கிறோம். வருஷக் கணக்காக மழையே இல்லாமல் கடும் வெய்யில் விடாமல் எரித்துக் கொண்டிருக்குமாம்; உலகிலுள்ள சகல ஜீவ ராசிகளும், புல் பூண்டுகளும் அழிந்து போகுமாம்; பிறகு வருஷக் கணக்காக இடைவிடாமல் மழை பெய்து உலகையே மூழ்க அடித்து விடுமாம். ஆனாலும், இவ்வளவு சர்வ நாசத்துக்கும் மத்தியில் எங்கேயோ சில இடங்களில் ஜீவ தத்துவம் மறைந்து கிடக்கத்தான் கிடக்குமாம். பிரளயத்துக்குப் பிறகு, இந்த ஜீவ தத்துவங்களிலிருந்து பழையபடியே புல் பூண்டுகள் ஜீவ ராசிகள் எல்லாம் நாளடைவில் உண்டாகிவிடும்.

தற்போது உலகம் பலாத்காரப் பிரளயத்திலே மூழ்கிக் கிடக்கிறதைப் பார்க்கிறோம். ஆனால் இவ்வளவு பிரளயத்துக்கு மிடையில், புதிய உலகத்தின் விதை எங்கேயோ கிடக்கத்தான் கிடக்கு மல்லவா?

அந்த விதை இந்தியாவிலே மகாத்மா காந்தியினிடத்திலேதான் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

மனிதனைப் பற்றிப் பகவான் கொண்டிருக்கும் நம்பிக்கை இந்தியாவின் மூலமாகவே நிறைவேறப் போகிறது.

"வெற்றி கூறுமின் வெண்சங் கூதுமின்!
பாரிலுள்ள பல நாட்டினர்க்கும்
பாரதநாடு புது நெறி பழக்கல்
உற்றதிங் கிந்நாள்......"

என்று கவியரசர் பாரதியார் கூறியது அருள் வாக்கன்றோ?

காந்தி அஞ்சலி — 5

யாருக்கு ஒப்பிடலாம்?

காந்திஜியின் பரம பக்தர்களில் ஒருவரும், அவருடைய அஹிம்சா தத்துவத்தை சென்ற இருபது இருபத்தைந்து வருஷ காலமாக மேல் காட்டு மக்களிடையே பரப்பி வருபவருமான ஜான் ஹெயின்ஸ் ஹோம்ஸ் என்னும் பிரபல அமெரிக்க கிறிஸ்தவ மடாலயத் தலைவர் காந்திஜியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :—

"சென்ற காலத்து மகான்கள் எல்லோரையும்விடப் பெரிய மகான் காந்திஜி. தேசியத் தலைவர் என்ற முறையில் ஆல்பிரட், வாலேஸ், வாஷிங்டன், கோஸியாஸ்கோ ஆகிய தலைவர்களை யொத்தவர் மகாத்மா காந்தி. சமூகத்தில் அடிமைப்பட்டுக் கிடந்தவர்களுக்கு விடுதலை அளித்தவர் என்ற முறையில் கிளார்க்ஸன், காரிஸன், அப்ரஹாம் லிங்கன் முதலியோரைப் போன்ற பெரியார். 'சாத்வீக எதிர்ப்பு' முறையை மக்களுக்குப் போதித்த செயின்ட் பிரான்ஸிஸ், தோரோ, டால்ஸ்டாய் ஆகியோருக்கு அவர் இணையானவர். எக்காலத்துக்கும் உரிய தீர்க்கதரிசிகளில் புத்தர், ஸொராஸ்டர், லா ஊத்ஸே, ஏசுநாதர் போன்றவர்களின் ஸ்தானத்தை அவர் இன்று வகிக்கிறார்."

ராஜகுமாரன் பிழைத்தான்!

கிச்சு

ஓர் ஊரில் ஒரு ஏழைச் சிறுவன் இருந்தான். அந்தச் சிறுவனுக்குத் தாத்தா ஒருவர் இருந்தார். அவர் அடுத்த கிராமத்தில் வசித்து வந்தார். அவரைப் பார்த்துவிட்டு வருவதற்காகச் சிறுவன் ஒரு நாள் தன் கையில் சிறு சோற்று மூட்டையுடன் வீட்டை விட்டுக் கிளம்பினான். போகும் வழியில் ஒரு கிழவி 'பசி, பசி!' என்று துடித்துக் கொண்டிருந்தாள். அவளிடம் சிறுவனுக்கு இரக்கம் உண்டாயிற்று. அவன் தன் கையிலிருந்த சாதத்தை அவளிடம் கொடுத்து, அருகிலிருந்த குளத்திற்குப் போய்க் கொஞ்சம் ஜலமும் கொண்டு வந்து கொடுத்தான்.

கிழவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. "அப்பா! நான் ஏழை. என் கையில் ஒன்றுமில்லை. இந்தக் கண்ணாடி ஒன்றுதான் இருக்கிறது. ஆனால், இது சாதாரணக் கண்ணாடியல்ல; இதை நீ வைத்துக் கொள்!" என்று சொல்லி ஒரு சிறு முகம் பார்க்கும் கண்ணாடியை அவனிடம் கொடுத்தாள். பிறகு, அந்தக் கிழவி அவனைத் தன் அருகில் அழைத்து, அவன் காதோடு காதாக ஏதோ சொல்லி வைத்தாள்.

அவளிடம் விடை பெற்றுக் கொண்டு சிறுவன் மேலே நடந்தான். அங்கே ஓர் ஊரில் அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. ஏனெனில், அந்த ஊர் ஒரே துக்கத்தில் ஆழ்ந்திருந்தது. அவன் "விஷயம் என்ன?" என்று விசாரித்தான்.

"இந்த ஊரின் எல்லையில் ஒரு ராக்ஷஸன் இருக்கிறான். அவன் தான் சாப்பிடுவதற்குத் தினம் ஒரு வண்டிச் சோறும் ஓர் ஆளும் அனுப்ப வேண்டும் என்று ராஜாவுடன் உடன்படிக்கை பண்ணிக் கொண்டிருக்கிறான். அந்த முறைப்படி இன்று ராஜகுமாரனைச் சோற்று வண்டியுடன் அனுப்ப வேண்டும். அதனால் இந்த ஊர் ஒரே துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது!" என்று சொன்னார்கள்.

இதைக் கேட்டதும் அந்தச் சிறுவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவன் நேராக ராஜாவிடம் போய், "நான் அந்த ராக்ஷஸனைக் கொன்று விடுகிறேன். ராஜகுமாரனுக்குப் பதில் சோற்று வண்டியுடன் என்னை அனுப்புங்கள்" என்றான்.



ராஜாவுக்குச் சிரிப்பு வந்தது. 'இந்தச் சிறுவன் அந்த ராக்ஷஸனை எப்படிக் கொன்று விட முடியும்?' என்று முதலில் நினைத்தான். பிறகு, 'இருந்தாலும் பார்ப்போம்!' என்று அந்தச் சிறுவனை ராஜகுமாரனுக்குப் பதில் சோற்று வண்டியுடன் அனுப்பி வைத்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த ஏழைச் சிறுவன் சோற்று வண்டியுடன் ராக்ஷஸன் இருக்க இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.



அந்தச் சிறுவனை அங்கு கொண்டு வந்து சேர்த்த அரண்மனைச் சேவகர்கள் இருவரும், "இந்தச் சிறுவன் அந்த ராக்ஷஸனை எப்படிக் கொல்கிறான் என்று சற்று நேரம் இங்கேயே இருந்து வேடிக்கை பார்ப்போமா?" என்று முதலில் நினைத்தனர். பிறகு, "அந்த அரக்கன் நம்மையும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டால் என்ன செய்வது?" என்று அவர்கள் பயந்துபோய் அரண்மனைக்குத் திரும்பி விட்டார்கள்.

ராக்ஷஸன் முதலில் தனக்காக வந்திருந்த ஒரு வண்டிச் சோற்றையும் காலி செய்துவிட்டு, பிறகு அந்தச் சிறுவனை விழுங்குவதற்காக நெருங்கினான். சிறுவனோ ராக்ஷஸனைக் கண்டு கொஞ்சங்கூட அஞ்சவில்லை. அவன் உடனே கிழவி தனக்குக் கொடுத்த கண்ணாடியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "நீ காசியைப் பார்த்திருக்கிறாயா, கன்னியா குமரியைப் பார்த்திருக்கிறாயா?" என்று ராக்ஷஸனை நோக்கிக் கேட்டான்.

ராக்ஷஸனுக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படியாவது சிறுவனைப் பிடித்துத் தின்றுவிடுவதென்று அவன் ஓடோடியும் வந்தான்.

"கொஞ்சம் பொறு! நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்லிவிட்டுப் பிறகு நீ என்னைப் பிடித்துத் தின்றுவிடு!" என்றான் சிறுவன்.

"என்ன?" என்று கேட்டான் ராக்ஷஸன்.

"நீ காசியைப் பார்த்திருக்கிறாயா?"

"இல்லை."

"கன்னியாகுமரியைப் பார்த்திருக்கிறாயா?"

"இல்லை."

"நீ எந்த ஊரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்?" என்று கேட்டான் சிறுவன்.

அந்த ராக்ஷஸனுக்கு ரொம்ப நாளாகக் காசியைப் பார்க்க வேண்டுமென்று ஆசை. ஆகவே, "நான் காசியைப் பார்க்கவேண்டும்" என்றான் அவன்.


"அப்படியானால் சரி; நீ எந்த ஊரைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறாயோ, அந்த ஊரின் பெயரைச் சொல்லிக் கொண்டு, இந்தக் கண்ணாடியில் பார்த்தாயானால் அந்த ஊர் தெரியும்" என்றான் சிறுவன்.

உடனே "காசி" என்று சொல்லிக் கொண்டு ராக்ஷஸன் ஆவலுடன் கண்ணாடியைப் பார்த்தான். அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் அந்த ராக்ஷஸன் கற்சிலையாகி விட்டான்!

ஏன் தெரியுமா? அந்தக் கண்ணாடி மாயக் கண்ணாடி. அதில் யார் முகத்தைப் பார்த்தாலும் உடனே அவர்கள் கற்சிலையாகிவிடுவார்கள் என்று கிழவி அந்தச் சிறுவனிடம் சொல்லியிருந்தாள்; அவள் சொன்னபடி நடந்து விட்டது!

ராக்ஷஸன் கல்லாக மாறியதும் சிறுவனின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? வெற்றி வீரனாக அவன் அரண்மனைக்குத் திரும்பி வந்தான். அரசனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அந்தச் சிறுவனுக்குத் தன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்து, தன்னுடைய ராஜ்யத்தில் பாதியையும் மஞ்சக் காணியாகக் கொடுத்தான்.

தனக்கு உயிர்ப் பிச்சை அளித்த ஏழைச் சிறுவனை ராஜகுமாரன் மனமார வாயார வாழ்த்தினான்.



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

நாற்பத்துமூன்றாம் அத்தியாயம்

இது என்ன உலகம்!

ஒரு மாதம் சென்றுவிட்டது. பத்மா வெகு நாட்கள் வரை மிகவும் வருத்தமாகவே யிருந்தாள். 'இந்தக் கதையனைத்தையும் ஒரு பத்திரிகையில் வெளியிட்டு, போலீஸாரின் குட்டை வெளிப்படுத்திவிட்டால் என்ன? அவர்கள் கட்டியிருக்கும் அந்த ஆகாயக் கோட்டையைத் தகர்த்தெறிந்து விட்டால் என்ன?' என்றெல்லாம்கூட அவளுக்கு அநேக தடவை வெறி ஏற்பட்டதுண்டு. ஆனால் அந்த வெறியெல்லாம் நாட்கள் ஆக ஆக அடங்கி விட்டது. ஆத்மாவின் ஆழத்தில் மறைந்திருந்த சக்திதான் அவளை அப்படி வாய் திறக்க வொட்டாமல் அடித்து வந்தது. அவள் ரமாநாத்தைத் தன் உள்ளத்திலிருந்தே வெளியேற்றி விட முயன்றாள். அவன்மீது அவளுக்குக் கோபமோ தாபமோ, தயவோ தாட்சண்யமோ, துவேஷமோ வெறுப்போ ஏற்படவில்லை; ஒருவித அலட்சிய பாவம்தான் உதித்திருந்தது. 'அவன் இறந்து விட்டான்' என்ற செய்தியைக் கேட்டாலும் அவளுக்கு அழுகை வந்திராது; அதை ஈச்வர சிருஷ்டியின் ஒரு லீலை, மாயையின் மமதையற்ற ஞானமயம் என்றெண்ணிச் சிறிது நேரத்துக்கு வேண்டுமானால் சோர்வு ஏற்பட்டிருந்திருக்குமோ, என்னவோ!

இரண்டரை வருஷங்களுக்கு முன்னால் அவளுடைய கழுத்தில் கட்டப்பட்ட அந்த அன்புக் கயிறு அறுந்து விட்டது; அதன் அடையாளம் மட்டும்தான் கொஞ்சம் பாக்கியிருந்தது. இதற்கு மத்தியில் எத்தனையோ தடவை ரமாநாத் அவள் வீட்டு வாசல் வழியாகக் காரில் போயிருக்கிறான். அப்பொழுது அவனுடைய கண்கள் யாரையோ தேடுவதுபோல அண்ணாந்து நோக்கினதையும் அவள் கவனிக்காமல் இல்லை. அந்தக் கண்களில் வெட்கமும், மன்னிப்புக் கோரும் பாவனையும் தோய்ந்திருப்பதையும் அவள் உணராமல் இல்லை. அப்படியிருந்தும் அவனைப் பத்மா கண்ணெடுத்துக் கூடப் பார்க்க விரும்பவில்லை. அவன் அவளுடைய காலடிகளிலே வந்து விழுந்து கெஞ்சினால்கூட அவள் பொருட்படுத்தியிருக்க மாட்டாள். ரமாநாத்தின் தன்னலத்தை நினைத்தாலே அவளுக்குத் தன் உள்ளத்தை அரம் கொண்டு அறுப்பது போலிருந்தது. அப்படி யிருந்தும் அந்த அன்புத் தீயின் அடையாளம் அவளை விட்டு அகன்றபாடில்லை.

ஒரு காலத்தில் அவள் அன்பே உருவான ரமாநாத்தைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறாள் அல்லவா? அதை அவ்வளவு சீக்கிரமாக மறந்துவிட முடியுமா? அது சிற்சில சமயம் அவளுடைய இருள் அடைந்த இதயத்தில், தேய்பிறைச் சந்திரனின் மங்கின ஒளியைப்போலப் பிரவேசித்துப் பழைய நினைவுகளைத் தட்டி எழுப்பிவிட்டு மறைந்து விடும்; பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம், அவளுடைய

உள்ளத்தைப் பழையபடி அந்த இருள் வந்து கௌவிக்கொண்டு விடும்; நிச்சயம் நிலவிவிடும். அவனுடைய உள்ளத்தில் இப்பொழுதெல்லாம் வருங்காலத்து இன்பக் கனவுகள் எழுவதில்லை; சப்பென்று சாரமற்று விளங்கும் கிழக் காலத்தின் பயங்கரத் தோற்றந்தான் அவன் கண்முன் காட்சி அளித்து வந்தது.

தன் வீட்டில் எதற்கும் அதிகாரம் செலுத்திக்கொண்டு ஆனந்தமாக வாழ்க்கை நடத்திவந்த பத்மா, இப்பொழுது தியாகம், ஊழியம், பொறுமை இவைகளே உருவெடுத்தவளாக ஆகிவிட்டாள். கிழவி அவளை எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். ஆனால் அவள் விடியற் காலையில், எழுந்து வீட்டைப் பெருக்கி, மெழுகிக் கோலமிடுவாள்; பிறகு பாத்திரங்களைத் தேய்த்து வைப்பாள்; அடுப்புப் பற்ற வைப்பாள்; சமையலுக்கு வேண்டியதைச் சித்தம் செய்வாள். சமைக்கும் வேலை ஒன்றைத் தவிர வேறெந்த வேலையையும் கிழவியின் கண்களில் காட்டமாட்டாள். ஆசார விசாரத்தைக்கூட அவள் மூட்டை கட்டி மாடத்தில் வைத்துவிட்டாள். இருவரும் தாயும் மகளும் போல காலடையில் பழக ஆரம்பித்துவிட்டனர்.

வழக்கு விசாரணை அநேகமாக முடியும் கட்டத்துக்கு வந்துவிட்டது. இருதரப்பு வக்கீல்களும் தங்கள் தங்கள் கட்சியை எடுத்து உரைத்துவிட்டனர். தீர்ப்புக் கூறுவது ஒன்றுமட்டும்தான் பாக்கியிருந்தது. தீர்ப்பு வெளிவரப் போகும் அன்றைக்குப் பத்மா விடியற்காலையிலே எழுந்து வீட்டுவேலைகளைக் கவனித்து விட்டு, 'பத்திரிகை எப்பொழுது வரப்போகிறது?' என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் தேவிதீன் பத்திரிகையும் கையுமாக அங்கே வந்து சேர்ந்தான். பத்மா அதை வாங்கிப் 'பரபர' வென்று பிரித்துத் தீர்ப்பைப்படிக்கலானாள். தீர்ப்பு! தீர்ப்பா அது? ஒரு கட்டுக் கதையல்லவா? அதற்குப் பிரதான கதா நாயகன் ரமாநாத். அவ்வளவுதானே! ஜட்ஜ் வரிக்கு வரி அவனைப்பற்றி வாயாரப் புகழ்ந்திருந்தார். அந்த வழக்கே அவனுடைய வாக்கு மூலத்தின் பலத்தைக் கொண்டுதானே அவ்வளவு பெரியதாகி யிருந்தது?


"தீர்ப்பு வெளிவந்திருக்கிறதா?" என்று கேட்டான் தேவிதீன்.

பத்மா பத்திரிகையைப் படித்த வண்ணம் "வந்திருக்கிறதே!" என்றாள்.

"யார் யாருக்கெல்லாம் தண்டனை விதித்திருக்கிறார்கள்?"

"ஒருத்தர் பாக்கி விடவில்லை. எல்லோருக்குமே தண்டனை அளித்திருக்கிறார்கள். ஒருத்தருக்குத்தான் தூக்குத் தண்டனை. மற்றவர்களில் ஐந்து பேருக்குத் தலா பத்து வருஷமும், பாக்கிப் பேருக்கு எட்டு வருஷமும் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறார்கள். அந்தத் தினேஷுக்குத்தான் தூக்குத் தண்டனை." என்று சொல்லிக்கொண்டே, பத்மா பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டாள். பிறகு அவள் ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டவாறு, "பாவம்! அவர்களுடைய குடும்பத்தின் கதி என்ன ஆகுமோ?" என்றாள்.

தேவிதீன் வருத்தத்துடன், "அன்றைக்கு நீ சொன்னது முதற்கொண்டு, அந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் குற்றவாளிகளின் குடும்பங்களைப் பற்றி விசாரித்து வருகிறேன். அவர்களில் எட்டுப் பேருக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை என்றும் அவர்களுடைய குடும்பங்கள் நல்ல



"என்ன ஸார், எங்கே கௌம்பிட்டேள்! பிரயாணமா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லே, ஸார்! இது மாப்பிள்ளையின் படுக்கை! படுக்கையைக் கட்டி வைத்தாலாவது கிளம்புகிறானோவென்று பார்க்கலாமேன்றுதான்!"

ஸ்திதியில் இருக்கின்றன என்றும் பேசிக் கொள்கிறார்கள். மற்ற அறுவரில் ஐந்து பேருக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாம். சோற்றுக்குப் போதுமான சொத்து அவர்களுக்கும் இருக்கிறதாகக் கேள்வி. ஆனாலும் தேவை புள்ளவர்களுக்குக் கொடுத்து உதவுவதற்காகப் பொது ஜனங்கள் நிதி திரட்டுகிறார்கள். பாவம், அந்தத் தினேவின் குடும்பம்தான் குட்டிச் சுவராகி விட்டது. அவனுக்கு இரண்டு பச்சைக் குழந்தைகளாம். கிழத் தாயார் வேறு இன்னும் உயிருடன் இருக்கிறாளாம். ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் அவன் உபாத்தியாயராக இருந்தானும் வாடகைக்கு வீடு எடுத்துக்கொண்டு வசித்து வருகிறானும். அவனுடைய பெண்டாட்டி அந்தக் குடும்பத்தை எப்படித்தான் காப்பாற்றப் போகிறாளோ? ரொம்ப ரொம்பக் கஷ்டப்படுகிறது அவனுடைய குடும்பம் ஒன்றுதான்!'' என்றான்.

"அவன் வீடு எங்கே யிருக்கிறதாம்?'' என்று கேட்டாள் பத்மா.

"விசாரித்தால் தானே தெரிகிறது.''

பத்மா கெஞ்சும் பாவனையில், "விசாரிப்பதற்கு எப்பொழுது போகலாம்? நானும் கூட வருகிறேன். இப்போதே வேண்டுமானாலும் நான் புறப்படத் தயார்!'' என்றாள்.

தேவீநின் அதை ஆட்சேபித்து, "முதலில் நான் போய்த் தெரிந்துகொண்டு வருகிறேன். அப்புறம் நீயும் வரலாம். வீணில் எதற்காக என்னுடன் இப்பொழுது சுற்ற வேண்டும்?'' என்றான்.

பத்மா வேறு வழியின்றி மனதை அடக்கிக்கொண்டு மௌனம் சாதித்தாள்.

தேவீநின் புறப்பட்டுப் போய் விட்டான். அவன் போனதும் அவள் மறுபடியும் பத்திரிகையைப் பிரித்துப் படிக்கலானாள். ஆனால் அவளுடைய கவனம் முழுவதும் தினேவின்மீதே இருந்தது. பாவம், 'தூக்குத் தண்டனை தனக்குக் கிடைத்திருக்கிறது' என்ற செய்தியைக் கேட்டதும் அவன் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? அவனுடைய கிழத் தாயும், மனைவியும் இதைக் கேள்விப் பட்டதும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அலறி யிருப்பார்கள்! அவனோ அப்பாவி ஏழை வாத்தியார்! தன்னுடைய வயிறு கழுவுவதற்கே அவன் மிகவும் அவதிப்பட்டிருக்க வேண்டும்! இனிமேல் அவன் குடும்பத்துக்கு யார் உதவப்போகிறார்கள்? அவர்கள் குடும்பம் படப் போகும் கஷ்டங்களைக் கற்பனை செய்து பார்த்த மாத்திரத்திலேயே, அவளுக்கு சமாசாரத்தீது அளவற்ற வெறுப்பு உணர்ச்சி உதித்துவிட்டது. அவளால் அதை மறந்து அலட்சியமாக இருக்க முடியவில்லை. அந்தச் சமயம் மட்டும் சமாசாரத் அருகே வந்துவிட்டால், அந்த இடத்திலேயே அவன் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டும்—அப்படித் திட்டியிருப்பாள்.

"நீயும் ஒரு மனுஷ்யன் மாதிரி! மனித உருவத்தில் வந்த இராட்சஸப் பேய்! உன்னைப் போன்ற நீசன், பாவி, சண்டாளன் இந்த உலகத்தில் யாரும் கிடையாது. உன் முகத்தில் எவனாவது காறித்தான் உமிழ்வான்! உன்னை என் அப்பொழுதே யாரும்



கொன்று போடவில்லை? அவர்கள் உயிர் போவது இன்னாளையே பிழைத்தாலும், அந்தப் பழி உன்னைச் சேராமலாவது இருக்கும் அல்லவா? உனக்கு ஏன் இப்படிப் புத்தி போயிற்று? கௌரவமும், கண்ணியமும், நம்பிக்கையும் வாய்ந்த ஒரு தந்தைக்கு, உன்னைப் போன்ற பேடியும், பேராசைக்காரப் பேயுமான பிள்ளையா பிறக்க வேண்டும்'' என்றெல்லாம் வாயில் வந்தபடி அவனை வைய வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிற்று.

இம்மாதிரி சிந்தனையில் பத்மா எவ்வளவு நேரம் ஈடுபட்டிருந்தாளோ தெரியாது. வெய்யில் தாழ்ந்து விட்டது. ஆனால் தேவிதீன் திரும்பி வந்தபாடில்லை. பத்மா அடிக்கடி ஜன்னல் வழியே இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் எட்டிப் பார்க்கலானாள். ஆனால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தேவிதீனைக் காணோம். மணி ஏழு அடித்து விட்டது. அப்பொழுதும் தேவிதீன் வரவில்லை. திடீரென ஒரு மோட்டார் வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து ரமாநாத் இறங்கி வந்தான். அவன் ஜழபியைப் பார்த்து, ''என்



பாட்டி, சௌக்கியமா? தாத்தா எங்கே போயிருக்கிறார்?'' என்று விசாரித்தான்.

ஜழபி அவனை ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''எங்கே போயிருக்கிறாரோ, எனக்குத் தெரியாது!'' என்று சொன்னாள்.

ரமாநாத் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து நான்கு பொன் வளையல்களை எடுத்து ஜழபியின் காலடிகளில் வைத்தவாறு, ''அம்மா, உனக்காக வாங்கி வந்திருக்கிறேன். 'சரியாக இருக்கிறதா?' என்று போட்டுக் கொண்டு பார்த்துச் சொல்லு!'' என்றான்.

ஜழபி அந்த வளையல்களை எடுத்து வீசி எறிந்துவிட்டு, அவனைச் சுட்டெரித்து விடுபவள்போலப் பார்த்துக் கொண்டே, ''அப்பா, போதும், உன் பாவக் காசில் வாங்கிய வளையல்கள் எனக்கு வேண்டவே வேண்டாம். கடவுள் புண்ணியத்திலே எத்தனையோ வளையல்கள் நான் செய்து போட்டுக் கொண்டு அழகு பார்த்து விட்டேன். இன்னமும் என்னிடம் வேண்டிய பொன் இருக்கிறது. அப்படி ஆசை ஏற்பட்டால் நான் அதைக் கொண்டு நகைகள் செய்து போட்டுக் கொள்ளுவேன். ஆனால் நான் உண்டு உடுத்திக் களித்ததெல்லாம் நானே உழைத்துச் சம்பாதித்த பணத்தைக் கொண்டாக்கும்! உன்னைப் போல் பிறர் நெஞ்சைத் திருகவில்லை; பாவச் செயல் செய்யவில்லை; மானத்தை விற்கவில்லை. உன்னைப் பெற்றாளே, அவள் வயிற்றில் தீயை வைக்க! 'பணத்தைக் கண்டதும் பெண்டாட்டி மயங்கி விடுவாள்' என்றெண்ணி, பாவம் பண்ணிச் சம்பாதித்ததைக் கொடுப்பதற்காக ஓடி வந்தாயோ? இவ்வளவு தான் அவளுடன் பழகியும், அவளுடைய சுபாவத்தை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே! பேராசை பிடித்த உன் கண்களுக்கு அது எங்கே தெரியப் போகிறது? உன்னைப் போன்ற இராட்சஸன், அவளைப் போன்ற மாசு மறுவற்ற தேவிக்குத் தகுந்தவனே யில்லை. உன் நன்மையை விரும்பினால் நீ வந்த வழியே வாய் திறக்காமல் திரும்பி விடு. அவளிடம்

சென்று இன்னும் எதற்காக நீ வீணில் அவமானப்படப் பார்க்கிறாய்? இன்று நீ போலீஸாரின் கைகளால் அடிபட்டுக் காயம் பட்டு வந்திருந்தாலும், அல்லது உனக்குச் சிறைத் தண்டனையே கிடைத்திருந்தாலும், அவன் உன்னைத் தெய்வம் என்றெண்ணித் தொழுதிருப்பான்; பூஜை செய்திருப்பான். கூலி வேலை செய்து பிழைக்கவோ, கந்தலை உடுத்திக்கொள்ளவோ, பட்டினியால் மடிமடியவோ அவன் தயங்குபவன் அல்ல; ஆனால் பிறருக்குக் கேடு விளைவிப்பதை அவன் கண் கொண்டு காணச் சகியான். அவன் அப்படிப்பட்ட உயர்ந்த நோக்கம் படைத்த பெண்ணுக்கும்! நீ மட்டும் என் பிள்ளையாக இருந்திருந்தால், நான் விஷம் கொடுத்து உன்னைக் கொன்றே போட்டிருப்பேன். இங்கே நின்று கொண்டு என் வயிற்றெரிச்சலை எதற்காகக் கொட்டிக் கொள்ளுகிறாய்? என் கண்முன் நில்லாதே!'' என்று கடிந்து கொண்டாள்.

ரமாநாத் தலையைத் தொங்கவிட்ட வண்ணம் பேசாமல் நின்றுகொண்டு, அவளுடைய சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு அவன் மிகவும் உடைந்த குரலில், "அம்மா, நான் செய்தது தப்புத்தான். சாகுமளவும் அதை நான் மறக்கமாட்டேன். ஆனால் நீ நினைப்பதுபோல நான் அவ்வளவு நீசன் அல்ல. போலீஸ் என்னை எப்படியெல்லாம் படாத பாடுபடுத்தி வைத்துக் கஷ்டத்துக்குள்ளாக்கியது என்பதை அறிந்திருந்தால் நீ என்னை இப்படி 'இராட்சசன், நீசன்' என்றெல்லாம் சொல்லி யிருக்கமாட்டாய்'' என்றான்.

பத்மாவின் காதுகளிலும் அவனுடைய சொற்கள் விழுந்தன. அவள் மாடியிலிருந்த வண்ணமே, எட்டிப் பார்த்தாள். ரமாநாத் காசிப்பட்டுத் தலைப்பாகையும், அழகிய கோட்டும் தங்க ப்ரேம் போட்ட மூக்குக் கண்ணாடியும் அணிந்து கீழே நின்று கொண்டிருந்தான். இந்த ஒருமாத காலத்துக்குள் அவனுடைய உடம்பு சற்றுப் பருத்திருந்தது; சரீரத்தின் நிறமும் இன்னும் சற்றுச் சிவந்திருந்தது. அவனுடைய முகத்தில் அப்பொழுது ஏற்பட்டிருந்த களைபோல முன்பு ஒரு பொழுதும் ஏற்பட்டதில்லை.

அவனுடைய கடைசிச் சொற்கள் பத்மாவின் காதுகளில் விழுந்தது தான் தாமதம்; மாடிப் படியிலிருந்து அவள் 'விடுவிடு' என்று இறங்கிவந்து நஞ்சு தோய்ந்த நேத்திரங்களுடன் அவனைச் சுட்டெரித்து விடுபவன்போல ஒரு முறை பார்த்தாள். பிறகு, "அப்படிப் போலீஸாருக்குப் பயந்த உங்களைப் பேடி, தொடை நடுங்கி என்றுதான் சொல்ல வேண்டும். 'நானும் ஒரு மனிதன்' என்று சொல்லிக் கொண்டு வெளியே கிளம்ப உங்களுக்கு உரிமை கிடையாது; அதற்கு நீங்கள் அருகதை யற்றவருங்கூட. அவர்கள் உங்களை அப்படி என்ன படாத பாடு படுத்திவிட்டார்கள்? சொல்லுங்கள், பார்ப்போம். நம் நாட்டில் எத்தனையோ பேர் சிரித்துக் கொண்டே தங்கள் உயிரைத் தியாகம் செய்யவில்லையா? பிள்ளைகளைப் பலி கொடுக்கவில்லையா? சத்தியம் தவறாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் என்னென்ன கஷ்டங்களெல்லாம் அனுபவிக்கவில்லை? அவர்களைப்போல 'என்னைக் கொன்றாலும் சரி, நான் பொய் பேச மாட்டேன்' என்ற வைர நெஞ்சத்துடன் இருப்பதற்கு உங்களுக்கு என்ன கேடு? தேகத்துக்குள்ளே ஆத்மா எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது, தெரியுமா? தேகம் அதை ரட்சிக்க வேண்டும் என்பதற்காகவே யன்றி, அதை அழித்துவிட வேண்டும் என்பதற்காக அல்ல. புரிகிறதா? ஆமாம், இந்தப் பாவச் செயலில் இறங்கினீர்களே, அதற்கு என்ன பரிசு கிடைத்தது? சற்றுச் சொல்லுங்களேன்!'' என்று கேட்டாள்.

ரமாநாத் மிகவும் கம்மின குரலில், "இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை'' என்றான்.

"இதைக் கேட்க எனக்குப் பரம சந்தோஷம். 'உங்களுக்கு ஒன்றும் கிடைக்கக்கூடாது. அவமானம்தான் கைகண்ட பலனாக இருக்கவேண்டும்' என்று நான் வேண்டிக் கொள்ளுகிறேன். எல்லாம் வல்ல ஈசன் என் வேண்டுகோளுக்கு இணங்க வேண்டும். ஆனால், மெழுகுபோல் உருகிக் கொடுக்கும் உங்களைப் போன்றவர்களைப் போலீஸார் கோபத்துக்கு ஆளாக்கமாட்டார்கள். ஆகையால் உங்களுக்கு ஒரு நல்ல வேலையே கிடைத்தாலும் கிடைத்துவிடலாம். ஆனால் நீங்கள் இப்பொழுது மாட்டிக்கொண்டிருக்கிறீர்களே, இந்த வலையிலிருந்து ஒருக்காலும் தப்ப முடியாது. பொய்ச் சாட்சி பொய் வழக்கு ஜோடிப்பது போன்ற காரியங்களைத்தான் பகவான் உங்கள் தலையில் எழுதி யிருக்கிறான் போலும்! போங்கள், உங்கள் இஷ்டப்படி வாழ்வின் இன்பத்தை அனுபவி

புங்கள். நான் முன்னமேயே உங்களிடம் சொல்லிவிட்டேன். இருந்தாலும் இன்று இன்னுமொரு தடவை சொல்லுகிறேன். இனிமேல் உங்களுக்கும் எனக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் நீங்கள் இறந்துவிட்டதாகவே நான் எண்ணிக் கொண்டுவிட்டேன். நான் இறந்துவிட்டதாக நீங்களும் எண்ணிக் கொண்டு விடுங்கள்! நான் ஒரு பெண்தான். இருந்தாலும் என்னை யாராவது அதட்டி உருட்டிப் பயமுறுத்திப் பாவச் செயலுக்குத் தூண்டினால், ஒருவேளை என்னால் அவனை அடித்துக் கொன்றுபோட முடியாமல் இருக்கலாம்; ஆனால் என்னுடைய நெஞ்சில் நானே குத்திக்கொண்டு என் உயிரைக் கூடவா மாய்த்துக்கொள்ள முடியாமற் போய்விடும்? பெண்களுக்கு இருக்கும் அந்தத் துணிவுகூட அல்லவா உங்களிடம் இல்லை!" என்றாள் பத்மா.

ரமாநாத் பிச்சைக்காரனைப் போலக் கெஞ்சிய வண்ணம், "ஏன், பத்மா! நான் சொல்வதைத் தயவு செய்து நீ கொஞ்சம் கூடக் கேட்கமாட்டாயா?" என்றான்.

பத்மா வெகு அழுத்தமான குரலில் "முடியாது!" என்றாள்.

ரமாநாத் ஒரு நிமிஷம் தலை குனிந்த வண்ணம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவாறு நின்றான். பிறகு அவன் வராந்தாவிலிருந்து கீழே இறங்கிக் கிழவியைப் பார்த்து, "பாட்டி, தாத்தா வந்தால் 'நான் வந்திருந்தேன்' என்றும் அவரைப் பார்க்க விரும்பினதாகவும் சொல்லு!" என்றான்.


கிழவி சிறிது மனமுருகி, "காலைக்கு இங்கேயே வாயேன்!" என்றாள்.

ரமாநாத் மோட்டாரில் ஏறி உட்கார்ந்த வண்ணம், "இங்கே வருவதற்கில்லை, பாட்டி!" என்றான்.

மோட்டார் மறைந்ததும் பத்மா குரலில் ஒருவித வரட்சி தொனிக்க, "தன் கைக் காசைப் போட்டு மோட்டார் வாங்கி விட்டதுபோல, இங்கே கொண்டு வந்து காட்டுவதற்கு வந்தாராக்கும், காட்டுவதற்கு!" என்றாள்.

"நீ இப்படியெல்லாம் துடுக்காகப் பேசுவது கொஞ்சங்கூட நன்றாயில்லை, பத்மா! புண் பட்ட உள்ளத்தைக் குத்தி

பரத நாட்டியம் பரவுகிறது!



பரத நாட்டியக் கலை இப்போது ஆழ்கடலின் ஆழத்துக்கும் பரவி விட்டதாம்! அதன் பயனாக, மேலிருந்து தூண்டில் இறங்குவதைப் பார்த்த ஒரு மீனானது "தூண்டிற் புழுவினைப் போல" என்ற பாட்டிற்கு அபிநயம் பிடிக்கிறது!

கொண்டு குத்துவது ரொம்பத் தப்பு!" என்று ஜீவி அவனை மிகவும் கடிந்து கொண்டாள்.

பத்மா அதே துடுக்குடன், "அவர் மானம் உள்ளவரா யிருந்தால் இப்படி இருப்பாரா, பாட்டி? அற்ப சுகத்துக்காக வளைவது தன் ஆத்மாவையே இப்படி விற்பாரா? — ஆமாம், தாத்தாவை எதற்காகப் பார்க்க வேண்டுமாம், கேட்கிறது தானே? தாத்தா வீட்டில் இருந்தால் இன்னும் கண்டபடி பேசியிருப்பார். அவர் இல்லாததனால் இம்மட்டோடு விட்டது!" என்றாள்.

ஜீவி அவளைத் திரஸ்கரிக்கும் தோரணையில், "உன் ஸ்தானத்தில் நான் இருந்தால் இப்படியெல்லாம் பேச எனக்கு வாய் எழாது, அம்மா! உன் நெஞ்சு கல்நெஞ்சு தான். இன்னொரு ஆண்பிள்ளையாயிருந்தால் இதுமாதிரிப் பேசாமல் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டான்! நான் விலவிலத்துப் போய் விட்டேன். உன்மேல் அவன் கை வைத்து விடாமல் இருக்கவேண்டுமே என்று எவ்வளவு பயந்தேன், தெரியுமா? நல்ல வேளை, அவன் கொஞ்சங்கூடக் கோபத்தைக் காட்டிக் கொள்ளவில்லை!" என்றாள்.

பத்மா அதே பழைய துடுக்குடன், "மானத்தை விற்றவர்களுக்குக் கோபம் வருவதாவது, பாட்டி?" என்றாள்.

அப்பொழுது உள்ளே நுழைந்த தேவீதின், "தம்பி இங்கே வந்திருந்தானா? வழியில் அவனைக் காரில் பார்த்தேன்!" என்றான்.

"ஆமாம், வந்திருந்தான். இப்பொழுது தான் சிறிது நேரத்துக்கு முன்னால் திரும்பிப் போகிறான். உங்களைப் பார்க்க வேண்டும் என்றுகூடச் சொன்னான்" என்றாள் ஜீவி.

தேவீதின் ஒருவித அசுவாரஸ்யத்துடன், "சரி, பார்த்தால் போயிற்று! அப்புறம் வேறு ஏதாவது சொன்னானா?" என்று விசாரித்தான்.

ஜீவி மிகவும் வருத்தத்துடன், "நாங்கள் அவனைப் பேசவிட்டால்தானே, அவன் ஏதாவது சொல்லுவதற்கு? முதலில் நான் அவனுக்கு மண்டகப்படி செய்தேன். நான் ஓய்ந்தேனோ இல்லையோ, பத்மா பிடித்துக்கொண்டு நன்றாகச் சாத்துபடி செய்து அனுப்பி விட்டாள்!" என்றாள்.

பத்மா தலையைக் குனிந்துகொண்டு, "பண்ணின பாவத்துக்குப் பலன் அனுபவித்துத்தானே தீரவேண்டும்?" என்று வேதாந்தம் பேசினாள்.

"நம்மை வேண்டியவர்கள் என்று எண்ணித்தானே பார்க்க வந்தான்!" என்றாள் ஜீவி.

"அவனை வெற்றிலை பாக்கு வைத்து யாரும் வருந்தி அழைக்கவில்லை...... என் தாத்தா, சிநேகிதன் வீடு எங்கே யிருக்கிறதாம்? ஏதாவது தெரிந்ததா?" என்று கேட்டாள் பத்மா.

"அவனுடைய வீடு ஹௌராவில் இருக்கிறதாம். விலாசங்கூடக் குறித்துக்கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் தேவீதின்.

"இன்றைக்கே போய் வருவோமா, அல்லது நாளைக்கு ஆகட்டுமா?" என்று பத்மா கேட்டாள்.

"உன் இஷ்டம்; நீ எப்பொழுது கூப்பிட்டாலும் நான் வரத் தயார்!"

"உங்களுக்குக் களைப்பா யிருக்கிறதோ, என்னமோ?"

"இந்த மாதிரிக் காரியங்கள் செய்யும் பொழுதெல்லாம் எனக்குக் களைப்பே தோன்றுவதில்லை, அம்மா!" என்றான் தேவீதின்.

மணி எட்டு அடித்துவிட்டது. சாலையில் கார்கள் சாரி சாரியாகப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தன. இரு புறத்து நடைபாதைகளிலும் ஆயிரக் கணக்கான ஆண் பெண்கள் அழகிய ஆடைகள் அணிந்து ஆனந்தமாகச் சிரித்துப் பேசியவாறே நடந்து கொண்டிருந்தனர். அதைக் கண்ணுற்ற பத்மா, "இந்த உலகம் எப்படித்தான் இன்பக் கேளிக்கைகளில் லயித்திருக்கிறதோ? அதற்கு யார் இருந்தால் என்ன, செத்தால் என்ன? சிறிதும் கவலையில்லை; தன் கூடு விட்டு மாறுவதும் இல்லை. அவனவன் தனக்கென்று சின்னஞ்சிறு மணல் வீடு கட்டிக்கொண்டு வசிக்கிறான். உலகம் எப்படிக் குட்டிச்சுவராய்ப் போனாலும் அவன் லட்சியம் செய்வதில்லை. 'தன் வீடு தப்பினால் போதும்; தன் சுகத்துக்குக் குந்தகம் விளையாமல் இருந்தால் சரி' என்றுதான் அவனவன் எண்ணுகிறான். சீ! இதென்ன உலகம்!" என்று எண்ணிக் கொண்டே அவள் நடந்தாள். 'இந்த ஜன சமுத்திரத்தில் சின்னஞ் சிறு கற்கள் விழுவதனால் அலையும் எழுவதில்லை; ஒலியும் எழுவதில்லை' என்ற விஷயம் அவளுக்குத் தெரியவில்லை போலும்! (தொடரும்)



காலக்ஷேபம்

சமாதானம்!

உபந்நியாசகர்:—அம்மா! நேற்று உங்கள் வீட்டுக்காரர் பாதிக் கதையில் எழுந்திருந்து போய் விட்டார். எனக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது.

வீட்டுக்கார அம்மாள்:—நீங்கள் அப்படியெல்லாம் வருத்தப்படக் கூடாது. அவர் வேண்டுமென்று செய்யவில்லை. அவருக்குத் தூக்கத்தில் நடக்கிற பழக்கமுண்டு!

★

கிடைத்த பலன்!

ராமு:—என்னப்பா, சிக்கன வாழ்க்கையைப் பற்றி உன் மனைவியிடம் பெரிய பிரசங்கம் செய்யப் போகிறேன் என்றாயே, ஏதாகிலும் பலன் ஏற்பட்டதா?

சோமு:—ஓ! ஏற்பட்டிருக்கிறதே!

ராமு:—என்ன?

சோமு:—என்னுடைய காப்பிப் பழக்கத்தை விட்டுவிட நேர்ந்தது!

★

ஆட்சேபம் இல்லை!

டைரக்டர் (திருடனாக நடிக்கப் போகிறவரிடம்):—இதோ, பார்! இந்தக் கூட்டத்தை நீ திருவிழாக் கூட்டமாகவே பாவித்துக் கொள்ள வேண்டும். அவர்களெல்லாம் சுவாமியைத் தரிசிப்பதற்காக நெருக்கியடித்துக் கொண்டு செல்கிறவர்கள் போல் செல்கிறார்களல்லவா? இந்தச் சமயத்தில் நீ உன்னை ஒரு அசல் திருடனாகவே நினைத்துக் கொண்டு, அதோ ஒருத்தி கழுத்தில் தங்கச் சங்கிலியுடன் எங்கேயோ பார்த்துக் கொண்டு போகிறாள், பார்!—அவளைப் பின்பற்ற வேண்டும். திடீரென்று அவளுடைய தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட வேண்டும்; நிற்கவே கூடாது! என்ன சொல்கிறாய்?

நடிகர்:—எனக்கு ஆட்சேபமே யில்லைங்க! போலீஸார் மட்டும் என்னைப் பிடித்துக் கொள்ளாமல் நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேணும்!

விந்தை பிடிக்கவில்லை!

தாயார்:—ஏன்டா, கண்ணு! நேற்று சர்க்கஸ் பார்த்தாயே, நன்றாயிருந்ததா?

பையன்:—எல்லாம் நன்றாயிருந்தது, அம்மா! ஆனால் ஒரே ஒரு விந்தைதான் எனக்குப் பிடிக்கவில்லை.

தாயார்:—அது என்ன விந்தை?

பையன்:—ஒரு பெண்ணை நிறுத்தி வைத்துக் கத்திகள் எறிகிறானே, அந்த விந்தைதான் எனக்குப் பிடிக்கவில்லை.

தாயார்:—ஏன்?

பையன்:—எறிந்த கத்தி எல்லாமே குறி தவறிப் போய்விட்டதல்லவா?

★

யாருக்கு அதிர்ஷ்டம்?

"ஏன் ஸார்! இரவில் கறுப்புப் பூனை குறுக்கே போனால் அதிர்ஷ்டமா?"

"மனுஷனுக்கு அதிர்ஷ்டமோ இல்லையோ, பூனைக்கு அதிர்ஷ்டம்தான்! இரவில் கறுப்புப் பூனை யாருடைய பார்வையிலும் விழாது. ஆதலால் அதை யாரும் திட்டமாட்டார்கள்!"

★

அவசியமில்லை!

ஒருவர் ஹோட்டலுக்குச் சென்று வெகு நேரம் காத்திருந்து பார்த்தார். ஒருவரும் வரவில்லை. கடைசியில் பொறுமை இழந்து ஹோட்டல் சர்வரிடம், "ஏன் ஐயா! பசியால் சாகிறவரை இங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டியதுதானா!" என்றார்.



"வேண்டாம் வேண்டாம்! எட்டு மணிக்கெல்லாம் நாங்கள் ஹோட்டலை மூடி விடுவோம்!" என்றான் சர்வர்.


உலகிலேயே முதன்மையாக விரும்பப்படும் டயர்

நெடுங்காலம் உழைப்பது எப்படி!

குட்இயர் டயரின் ஒவ்வொரு பாகமும் நெடுங்காலம் உழைக்குமா என்று பற்பல முறைகளில் பரிக்ஷிக்கப் படுகிறது.


பல முறை பரிக்ஷைகளிலும் தாங்கக்கூடிய பொருள்கள் மட்டுமே குட்இயர் டயர்களில் உபயோகிக்கப் படுகின்றன.

பல்வேறு காரணங்களில் இது ஒரு காரணத்தினால் தான் - குட்இயர் டயர் 1915-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் உலகிலேயே முதன்மையான ஸ்தானத்தைப் பெற்று வந்திருக்கிறது.



அதே உயர்தரமான தன்மை குட்இயர் பான்பெல்டுகளிலும் இருந்து வருகிறது.

BLACK SIDE WALL WHITE SIDE WALL



GOODYEAR TYRES

MORE PEOPLE, THE WORLD OVER, RIDE ON GOODYEAR TYRES THAN ON ANY OTHER MAKE.


எப்பொழுதும் எல்லா சீதோஷ்ண நிலைகளிலும்
இருமல்
ஜலதோஷம்
SIROLIN
ROCHE
For COUGHS COLDS
இவைகளை
குணப்படுத்த
ஸிரோலின்
"ரோச்"
உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI பிப்ரவரி 15, 1948 4 அணா

REGD. No. M. 4392



பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு ஹனுமான் ஸ்ட்ரீட், போர்ட். இலங்கைக்கு ஸோல்டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மெஸர்ஸ். மூனா. அருணா & கோ., லிட்., 93, கெய்ஸர் தெரு, கொழும்பு